விலை ரூபா 1-00 ★

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆவணி 22 ஞாயிறு 18 இதழ் 206

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7—9—82

செம்மணி - அரியாலையில் மணல் ஏற்றத் தடை!

(யாழ்ப்பாணம்)

செம்மணி – அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அள்ளுவது தடைசெய்யப்பட்டுள்ளது

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற மகாநாடொன்றில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இம்மகாநாட்டில் யாழ். அபிவிருத்திசபை பிரதித் தலைவர் திரு. சி. நாகராசா, கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம், யாழ் அரசாங்க அதிபரும் யாழ், மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா, ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மணல் அள்ளப்படுவதால் கடல்நீர் உட்புகவேண்டியபயங்கர நிலை ஏற்பட்டுள்ளதாகவும், கடல்நீர் உட்புகாதவாறு 3 லட்சம் ரூபாசெலவில் கட்டப்பட்ட அணையிலிருந்தே இந்தமண் அள்ளப்படுவதாகவும் இம்மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

மண் அள்ளுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதென்றும், அதற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களைப் பறிமுதல் செய்வதற்கு பொலிசாரின் உதவியை நாடுவதென்றும் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [மா]

ஜனாதிபதி வேட்பாளர் சிறிமாவோ அணிசார்பில்

ஹெக்டர் தெரிவு

'மைத்திரி' மறுபரிசீலனை செய்வாரா ?

(நமது சிறப்பு நிருபர்)

ஜனாதிபதி தேர்தலுக்கான அபேட்சகரைத் தெரிவு செய்வதில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் (சிறிமாவோ பிரிவில்) 'இழுபறி' நிலவுகின்ற போதிலும்; கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக திரு. ஹெக்டர் கொப்பேகடுவ தெரிவு செய்யப்படுவார் என்பது ஓரளவு ஊர்ஜிதமாகிவிட்டது.

ஜனாதிபதி வேட்பாளராக திரு. அநுரா பண்டாரநாயக்காவைத் தெரிவு செய்யவேண்டும் என்று கூடைசிநேர கையெழுத்து வேட்டை முழு வேகத்தில் நடந்தபோதிலும்; கட்சியின் மத்திய கமிட்டியின் கூடுதலான ஆதரவு திரு. ஹெக்டர் கொப்பேகடுவவுக்குத்தான் கிடைத்திருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின சிறிமாவோ அணியின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் யாரை நிறுத்துவதென்று இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத போதிலும் கடைசியாக நமக்குக்கிடைத்த தகவல்களின்படி, ஜனாதிபதி வேட்பாளராக திரு ஹெக்டர் கொப்பேகடுவ தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக கட்சிப் பொதுச்செயலாளர் திரு. இரத்தினசிறி விக்கிரமநாயக்கா அறிவித்திருப்பதாகத் தெரிபவருகிறது.

நிலைமை இவ்வாறிருக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (அகில இலங்கை) செயற்குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. சிறிமா அணியின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் யார் போட்டியிடுவார் என்பது இக் கூட்டத்தில் தான் இறுதியாக அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

மற்றைய வேட்பாளர்கள்

ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. கட்சி சார்பில் ஜே. ஆர். ஜயவர்த்தனா போட்டியிடுவது தெரிந்ததே

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் திரு. குமார் பொன்னம்பலம் போட்டியிடுகின்றார்.

லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் டாக்டர் கொல்வின ஆர். டி. சில்வாவும், மக்கள்விடுதலை முன்னணி சார்பில் திரு ரோகணவிஜேவீராவும்போட்டியிடுவார்கள் என்பது நிச்சயமாகிவிட்டது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மைத்திரி அணி சார்பில் திரு. மைத்திரிபால சேனநாயக்கா போட்டியிடுவார் என்று எதிர்

[8–ம் பக்கம்பார்க்க]

நிலக்கரி கப்பலில் துரித இறக்குமதி

(யாழ்ப்பாணம்)

இருபதினாயிரம் தான் நிலக்கரியுடன் 'யுனி–அமெரிக்கா' எனும் பாரிய ஜப்பானிய சரக்குக்கப்பல், காங்கேசன் துறை துறைமுகம்வந்துள்ளது

லங்கா சிமெந்துலிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் முதல் தடவையாக இறக்குமதி வேலைகள் நடைபெறும் இக்கப்பலில் இதுவரை எண்ணாயிரம்தொன் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மிகுதி பன்னிரண்டாயிரம் தொன் நிலக்கரியும் இருவாரங்களில் இறக்குமதி செய்யப்படும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

இறக்குமதி வேலைகள் குறித்து மேற்படி ஸ்தாபன உயர்அதிகாரிஒருவர் 'ஈழநாடு' விடம் தெரிவிக்கையில் மூன்றும்கட்டவேலைத்தள தொழிலாளர்களின் உதவியுடன் இரவுபகலாக இறக்குமதி வேலைகள் நடைபெறுகின்றன என்றும், மூன்றும்கட்ட திட்ட மிடல் முகாமையாளர் திரு. எம். டி. எவ் ஜெயமானே, வதிவிட பொறியியலாளர் திரு. ஏ. சோதிலிங்கம் ஆகியோரின் மேற்பார்வையில்

8–ம் பக்கம் பார்க்க)

அறிவித்தல்

• ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கிருஸ்ண ஜெயந்தி விழா எதிர்வரும் 10ம் திகதி [10–9–82] வெள்ளிக்கிழமை நடைபெறும்.

தர்மகர்த்தாசபை

4459

யாழ். சிறைச்சாலையில் நடந்த திருமணம்!

(யாழ்ப்பாணம்)

''பெற்றோர் தமது பிள்ளைகள் நலனில் அக்கறை எடுக்காததால் அவர்கள்குற்றவியல் சம்பவங்களில் ஈடுபடவேண்டிய சூழ்நிலை உருவாகிறது'' என்று யாழ். சிறைச்சாலை அதிபர் திரு. எஸ். சத்தியமூர்த்தி, யாழ், சிறைச்சாலையில் நேற்று பிற்பகல் நடைபெற்ற ஓர் திருமணப்பதிவு நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

எச். எம். வில்பேட் அல்லது உக்குவா [29–வயது] என்ற சிறைக்கைதிக்கும், செல்வி அனுலா கருணாநாயக்கவுக்கும் யாழ். சிறைச்சாலையில் பதிவுத் திருமணம் நடைபெற்றது

செல்வி அனுலா வாரியப் பொலவிலுள்ள மின்நெசவாலையில் இயக்குனராகக் கடமையாற்றுபவர்.

இம் மணமக்களின் பெற்றோர், சகோதரர்களும் சமூகமளித்திருந்தனர்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ். சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்தலைவரும் வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவருமான திரு. எஸ். கனகரத்தினம், நலன்புரிச்சங்க உப தலைவர் முகாந்திரம் ஈ. பி. இராசையா, யாழ். மாநகர முன்னாள் உறுப்பினரும் மாதர் சங்கத்தலைவியுமான திருமதி அந்தோனியா சுவாமிநாதர், பத்தவெல சிறீ சோராத நாயக்க தேரோ ஆகியோரும் நலன்புரிச்சங்க உத்தியோகத்தர் திரு ஸ்ரீநிவாசன், யாழ். சிறைச்சாலை உதவி அதிகாரி திரு. அமுனு உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் பிரசன்னமாயிருந்தனர். திரு. சத்தியமூர்த்தி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:–

''சிறைக் கைதியாயிருந்து திருமணம் செய்யும் இந்த

(8–ம் பக்கம் பார்க்க)

பஸ் மோதி யானையும் பாகனும் பலி!

(கொழும்பு)

பஸ்ஸினால் மோதுண்டு ஒரு யானையும், யானைப்பாகனும் பலியான சம்பவம் நேற்று அதிகாலை கொஸ்கொட எனுமிடத்தில் நிகழ்ந்தது!

காலி மாவட்டத்திலுள்ள கொஸ்கொட எனுமிடத்தில், காலிபிலிருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு பஸ் வீதிவழியாக வந்து கொண்டிருந்த ஒரு யானை மீது திடீரென மோதியது

இவ்விடத்தில் யானை உயிரிழந்ததுடன், யானைபாகனும் மரணமானான் பாகனுடன் சென்ற மற்றுமொரு உதவியாளர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பஸ்மோதி யானையும் பாகனும் மரணமானது இலங்கையில் இதுதான் முதல்தடவை என்று கூறப்பட்டது.

ஒருலட்சம் ரூபா மோசடி: பெண்ணுக்கு றிமாண்ட்

[யாழ்ப்பாணம்]

அபுதாபியில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி, எட்டுப் பேரிடம் ஒரு லட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்று ஐம்பது ரூபா மோசடி செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட வத்தளையைச் சேர்ந்த ஒருபெண் பிணையில் செல்ல பணம் செலுத்தத் தவறியதால், அடுத்த மாதம் ஏழாம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டார்.

வத்தளையைச் சேர்ந்த திருமதி யோகாம்பிகை நாகேந்திரன் என்பவர் நல்லூரைச் சேர்ந்த சி. அன்னலிங்கம் உட்பட எட்டுப்பேரிடம் அபுதாபியில் வேலைபெற்றுத்தருவதாகக் கூறி மேற்படி பணத்தைப் பெற்றுக்கொண்டதாகக் குற்றம்சாட்டி யாழ். பொலிஸ் நிலைய சார்ஜன்ட் ஜி பிள்ளையினால் யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இவ்வழக்கு யாழ். நீதிமன்ற நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டபோது, சந்தேகநபரை ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

பிணைப்பணம் செலுத்தத் தவறியதால் மேற்படி பெண்ணை அக்டோபர் மாதம் ஏழாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீதசபை நடாத்திய 82-ம் ஆண்டு சங்கீதப் பரீட்சைப் பெறு பேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளி வரும் சங்கீதம் முதலாம், இரண்டாம் பகுதி முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.

தெல்லிப்பழை

மூன்றும்பகுதி

இரண்டாம்பிரிவு

சாரதாதேவி வல்லிபுரம் [மே.பா.] வயலின், மேரி தஸ்நேவிஸ் லடிஸ்லாஸ் பாட்டு, ○ பாமதி இராஜ ரட்ணம் பாட்டு, கந்தவனம் வாரணன் பாட்டு, ○ கீதா பத்மநாதன் பாட்டு.

சாதாரணசித்தி

தெய்வஞானி பழனி யாண்டி பாட்டு, வீணை, மாதினி கந்தவனநாதன் பாட்டு, ஹேமாவதி குமார சுந்தரம் பாட்டு, கேமவதனி மூத்ததம்பி [மே. பா] வயலின், பாலசரஸ்வதி தில்லை நாயகம் பாட்டு, இரஞ்சித மலர் சுப்பிரமணியம் பாட்டு, சத்தியவாணி சிவநாதன் பாட்டு விஜயகுமாரி கனகரட்ணம் பாட்டு, பாக்கியலட்சுமி தர்மலிங்கம் பாட்டு, சுபாகினி இராஜகோபால் பாட்டு, இந்திராதேவி நல்லலிங்கம் பாட்டு, ஜெனனி தர்சினி பிரான்சிஸ் பாட்டு, சிவகுரு இரவீந்திரன் பாட்டு, ஞானேஸ்வரி திருநாவுக்கரசு பாட்டு, ஞானும்பாள் சிவபாத சுந்தரம் பாட்டு, ராதா மாணிக்கவாசகர் பாட்டு, மனோரதி நவரத்தினம் பாட்டு கமதினி பொன்னுத்துரை பாட்டு, சத்தியதேவி திருநாவுக்கரசு [மே பா] வயலின், வாசுகி இராமச்சந்திரன் [மே.பா]வயலின், சந்திரகுமாரி கனகரத்தினம் பாட்டு, மரீனா அருளானந்தம் பாட்டு, உஷா வினி வல்லிபுரம் பாட்டு. தயாளினி பரராசசேகரம் பாட்டு, கல்யாணி சுப்பிர மணியம [மே. பா] வயலின், ரூபினி தம்பிராஜா பாட்டு, நிர்மலா ஸ்ரீஸ்கந்தராஜா வயலின், சுபகரி பாலச்சந்திரன் [மே.பா] பாட்டு, ரஜினி இராமச்சந்திரன் பாட்டு, ஜெயகௌரி முருகையா பாட்டு, சாந்தி சந்திரசேகரி பாட்டு, கலைவாணி சபாரத்தினம் பாட்டு, தேவேஸ்வரி சுந்தரமூர்த்தி ஐயர் பாட்டு, A தாரணி அப்பாத்துரை பாட்டு.

பருத்தித்துறை

முதலாம்பிரிவு

○ சிவலட்சுமி திருநாவுக்கரசு பாட்டு. வயலின், ஜெயலக்சுமி நடராஜா [மே. பா] வீணை; ○ மாதினி செல்லத்துரை வயலின், ○ வசந்தி கந்தப்பிள்ளை வீணை, ○ தயாளினி கந்தப்பிள்ளை வீணை, ○ சசி சிவதாசன் வீணை, ○ நந்தினி நவரத்தினம் பாட்டு, ○ அற்புத மலர் கந்தசாமி பாட்டு, ○ தமயந்தி இராசலிங்கம் பாட்டு, ○ f நளாயினி தேவராஜா பாட்டு.

இரண்டாம்பிரிவு

○ சரஸ்வதி நடராஜா வீணை, ○ ஜெயந்தி செல்லையா வயலின், ரோகிணி சிவகணேசசுந்தரம் மே. பா] வயலின், அமிர்தராணி நடராஜா பாட்டு, ○ வரலட்சுமி சோமசுந்தரம் வீணை, ○ நர்மதா நவரட்ணராஜா வயலின், சியாமளா முத்துக்குமாரசாமி சர்மா மே.பா வீணை, ○ தேன்மொழி இராமகிருஷ்ணன் பாட்டு, வொறகின் நிர்மலன் இரத்தினம் வயலின், 0 சசிகலா கதிர்காமத்தம்பி பாட்டு 0 குமுதினி இராமலிங்கம் பாட்டு, 0 தேவகி இராசரத்தினம். பாட்டு.

சாதாரணசித்தி

கீதாஞ்சலி இரத்தினவடிவேல் பாட்டு, ரேணுகா சிவகணேசசுந்தரம் வயலின். சசிகலா நடேசபிள்ளை வீணை, வத்சலா கணேஸ்வரன் பாட்டு, சுஜாதை இரத்தினசிங்கம் பாட்டு, சுகன்யா கணேசலிங்கம் பாட்டு, அம்பிகை தியாகராஜா பாட்டு, வசந்தா ஆனந்த சங்கரி பாட்டு

சாவகச்சேரி

முதலாம்பிரிவு

○ கிட்ணன் பரமேஸ்வரன் பாட்டு, ○ ஜெயந்தி கனகரட்டினம் பாட்டு, ○ f யோகராணி இரத்தினம் பாட்டு. ○ சுகந்தினி கைலாசபிள்ளை பாட்டு, ○ கல்யாணி பரமேஸ்வரன் பாட்டு, ○ f லலிதா சிதம்பரப்பிள்ளை பாட்டு. ○ f ரஜனி நவரட்ணம் பாட்டு.

இரண்டாம்பிரிவு

○ சுகந்தினி நாசராஜா பாட்டு, ○ கௌசலாசிவஞானம் பாட்டு, ○ குமாரசாமி கானவேள் பாட்டு, ○ கண்ணகி குமாரசாமி பாட்டு, ○ நளினி பாலசிங்கம் பாட்டு.

சாவகச்சேரி

இரண்டாம்பிரிவு

இராஜலேகா இராஜரத்தினம் வீணை, ○ செல்வமலர் கந்தையா பாட்டு, ○ யசோதா ஐயம்பிள்ளை பாட்டு, ○ பூங்கோதை கார்த்திகேசு பாட்டு, வயலின், ○ ரூபவதனா மகேஸ்வரன் பாட்டு, கலைவாணி குலசிங்கம் பாட்டு, ○ யோகேஸ்வரி தம்பையா பாட்டு, ○ திருமகள் நெல்லிநாதன் பாட்டு, ○ ரஞ்சினி சிவஞானம் பாட்டு, ○ சுபத்திராதேவி கணேசன் பாட்டு

சாதாரணசித்தி

வரதஜெனனி மயில்வாகனம் பாட்டு, உதயமலர் மயில்வாகனம் வீணை, அனிற்றா சியாமளா செல்லையா பாட்டு, மஞ்சுளா சிவஞானம் பாட்டு, இரஜினி தம்பு பாட்டு, அருட்சோதி கந்தையா பாட்டு, நிர்மலா சின்னத்துரை பாட்டு, சுமதி பாலச்சந்திர ஐயர் பாட்டு, நிலந்தி கனகரட்ணம் பாட்டு. ஞானும்பிகை சின்னத்தம்பி பாட்டு, இராஜதிலகா இராஜரத்தினம் பாட்டு, மங்கையர்கரசி கந்தையா பாட்டு. சுபோதினி பத்மநாதன் பாட்டு, கனகசபாபதி திருமாறன் பாட்டு, பரமேஸ்வரி தம்பையா பாட்டு, கிருஷ்ணவேணி முருகையா பாட்டு.

○ சாஸ்திரப் பரீட்சையில் விசேஷசித்தி.

F செய்முறைப் பயிற்சியில் விசேஷசித்தி. (தொடரும்)

டுவிஸ்ட் சாதனை முயற்சி

(மட்டுவில்)

சாவகச்சேரியில் டுவிஸ்ட் நடன சாதனைஒன்றை நிலைநாட்டு முகமாக வாலிபர் ஒருவர் முதலாம் திகதி முதல் தனது சாதனையை ஆரம்பித்துள்ளார் இவர் தொடர்ந்து இரண்டு வாரம் ஆடி தனது சாதனையை நிலை நாட்டவுள்ளார்.

கொடிகாமம் இளைஞர் ஒன்றியத்தைச் சேர்ந்த பி. கணேசு என்ற வாலிபரே இந்த டுவிஸ்ட் நடன சாதனையை ஆரம்பித்துள்ளார்.

சாவகச்சேரி எம்.பி. திரு.வி என். நவரத்தினம், லயன்ஸ் கழக தலைவர் சட்டத்தரணி திரு. செ. அ. பிரபாலன், சட்டத்தரணி திரு. எஸ். திரு வியநாயகம் ஆகியோர் ஆசி கூற 1ம்திகதி இரவு 9 மணிக்கு இந்த முயற்சியை ஆரம்பித்துள்ளார்.

வடபகுதியில்

சினிமாத் தியேட்டர்களை மூடும் அபாயநிலை!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள சினிமாத் தியேட்டர்களை மூடும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக சினிமாத்தியேட்டர்களின் உரிமையாளர்கள் தெவித்துள்ளனர்.

சினிமாத் தியேட்டர் உரிமையாளர்களின் கூட்டம், நேற்று முன்தினம் கோப்பாய் எம்.பி. மு ஆலாலசுந்தரம் தலைமையில் யாழ். றீகல் தியேட்டரில் நடைபெற்றது.

சினிமாத்தியேட்டர்களின் வரிப்பழு, மின்சாரம், மற்றும் எண்ணெய் வரிஅதிகரிப்பு, தொலைக்காட்சி சேவை அதிகரிப்பு உட்பட தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தும் வரியும் மிகக்கூடுதலாக இருப்பதால் சினிமாதியேட்டர்களை தொடர்ந்து நடாத்த முடியாமலிருப்பதாக கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இவ்வரிகள் அதிகரிக்கப்பட்ட போதிலும் மேலும் டிக்கட் கட்டணத்தை அதிகரித்தால் பொதுமக்கள் பாதிப்படைவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக ஜனாதிபதியைச் சந்தித்து நடவடிக்கை எடுப்பதாக கோப்பாய் எம். பி. திரு.ஆலாலசுந்தரம் உறுதியளித்தார். (மா)

இன்றைய பலன்

ஆவணி மாதம் 22-ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(7—9—82)

மேடம்: மனதில் சோர்வு காணப்படும். எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அவசரப்பட வேண்டாம். பிணிக்கும் இடமுண்டு. அமைதியும் நன்று.

இடபம்: வாழ்க்கை இன்று வசதிகள் நிறைந்ததாக இருக்கும், தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார். டாக்டர்களுக்கு சிறப்பாதினம். பயனுள்ள தொடர்புகள் பெருகும்.

மிதுனம்: மனப்போராட்டங்கள் இடம் பெறும். உடல் நலம் பாதிக்கப்படலாம். குடும்பத்தில் ஏற்படும்மோதல்கள் விரக்திமனப்பான்மையை உருவாக்கும். அடக்கம் வேண்டும்.

கடகம்: வசதிகள் பெருகுவதுடன் வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் படைத்தவர்களின் உதவி கிடைக்கும். எதிர்பாராத விடயம் ஒன்று பலன் தரலாம்.

சிங்கம்: இதயத்தில்மகிழ்ச்சி தோன்றும். உறவு முறைகளில் இறுக்கம் ஏற்படும், பொதுமக்களின் பாராட்டும்கிடைக்கும். வியாபார விருத்திக்கும் இடமுண்டு.

கன்னி: கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும். போக்குவரத்து விடயத்தில் அதிககவனஞ் செலுத்த வேண்டும். திடீர் திருப்பம் உங்களை திகைக்க வைக்கலாம். பேச்சைக் குறைக்கவும்.

துலாம்: இல்லத்தில்இனிமை தழுவும். வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும். இன சனங்களின் உதவியுடன் செல்வாக்கும் உயரும். தெய்வ நம்பிக்கை நலனைத்தரும்.

விருச்சிகம்: நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடனும் பகைத்துக் கொள்ள வேண்டாம். பொருட் செலவுச்கும் இடமுண்டு.

தனு: தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வ நம்பிக்கை மேலிடும். ஸ்தல யாத்திரையொன்று மேற் கொள்ளப்படலாம். நினைப்பதைச் சாதிப்பதில் இன்று முன்னிலையில் நிற்பீர்கள்.

மகரம்: தொழில் மாற்றம் அல்லது இருப்பிடமாற்றத்துக்கு வழி கோலப்படலாம். இதன்மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கலாம். பேட்டி காண்பதற்கு ஏற்ற தினம்.

கும்பம்: முயற்சியின் மூலம் முதலிடத்தைப் பிடித்துக் கொள்வீர்கள். பல வழிகளிலும் பணம் கைக்கு வந்து சேரும். உற்சாகமளிக்கும் செய்தியொன்று கிடைக்கலாம்

மீனம்: எதிர்பாராத விளைவின் மூலம் செலவினங்கள் அதிகரிக்கும். சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடும். பிணிக்கும் இன்று இடம் கொடாது இருக்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுருவில் ரோமன் கத்தோலிக்கத் தமிழ்ப் பாடசாலைத் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை பாடசாலை அதிபர் திரு.வை. தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன். கணேசன், வர்த்தகர் திரு. க. சுப்பையா, வண.பிதா பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் உரைநிகழ்த்துவர். கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. [மா]

திருட்டு

[மாவிட்டபுரம்]

சிகை அலங்கரிப்பு நிலையமொன்று இரவு நேரத்தில் உடைக்கப்பட்டு சவரக் கத்திகளும், பணமும் திருடப்பட்டுள்ளன.

அம்பனைச் சந்தியிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்திலேயே இத்திருட்டுநடந்தது.

காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணை மேற் கொண்டுள்ளனர்.

வரினைம்பரம்

விற்பனைக்கு

'எண்ஜோதிடமன்னன்' வி. ஏ. சிவராசா பி. ஏ. பி. எல். எழுதிய 'எண்ஜோதிடம்' நூல் விற்பனையாகிறது. இந்நூலின் மூலம் உங்களுக்குரிய எண் எதுவென்பதைத் தெரிந்து கொண்டு உங்கள் வாழ்க்கையின் பலாபலன்களை தெளிவாகவும், விரிவாகவும் படித்து அறியலாம். ரூபா 18-50. ஸ்ரீலங்கா புத்தகசாலை, 232, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 4444

சுய உதவி வீடமைப்புத் திட்டம்

[மன்னார்]

சுயஉதவிவீடமைப்புத்திட்டத்தின் கீழ் ஏருக்கலம்பிட்டியில் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டு இடைநிறுத்தி வைக்கப்பட்ட 50 வீடுகளின் நிர்மாண வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மூதூர் எம். பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப். எம். ஈ. எச். மாஹ்ரூப் மேற்கொண்டிருந்தார்,

கலந்துரையாடல்

[மன்னார்]

மன்னார்மாவட்டத்தைஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பலகோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இம்மாதம் 10 ம் திகதி மன்னார் கச்சேரியில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில்உலக வங்கி நிபுணர்களுடன் மன்னார் எம்.பி. திரு சூசைதாசன் மன்னார் மாவட்ட அபிவிருத்திசபைதலைவர் திரு.செபமாலை மன்னார் அசாங்க அதிபர். திரு திரு டி. வாமதேவன் மேலதிக அரசாங் அதிபர் ஏ. மே. செந்தில் நாதன், திரு கே. கோபாலரட்னம், ஜனாப் எம். எம். மக்ஜூப், திட்டமிடல் பணிப்பாளர் திரு எஸ். தீவகளில் ஆகியோர் உட்பட பலஉயரதிகாரிகளும் கலந்து கொள்வார்கள்.

மன்னார் மாவட்டத்தை ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வது தொடர்பான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு நிபுணர்களின் பார்வைக்காக சமர்பிக்கப்பட்டுள்ளது

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

சர்வமங்களேஸ்வரி அம்பாள் கோயில் கட்டிட நிதிக்காக 2-9-82 அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்.

1-ம் பரிசு—31034—ரூ. 2/-
2-ம் ,, —30404—ரூ. 3/-
3-ம் ,, —35644—ரூ. 2/-

ஆறுதல் பரிசுகள்

[1] 12532—ரூ. 2/-	[2] 754—ரூ. 3/-
[3] 20606—ரூ. 2/-	[4] 38669—ரூ. 2/-
[5] 49239—ரூ. 2/-	[6] 20417—ரூ 3/-
[7] 20055—ரூ. 3/-	[8] 6334—ரூ. 3/-
[9] 1627—ரூ. 3/-	[10] 2597—ரூ. 2/-

பரிசுக்கு உரிமையுடையவர்கள் அத்தாட்சியுடன் பரிசில்களை நேரில் பெற்றுக்கொள்ளவும்.

டாக்டர் சே. சண்முகநாதன்,
கமலாதேவி சண்முகநாதன்
மே/ பா. செ. இராமநாதன்.

மயிலணி,
சுன்னாகம். 4451

அரபுப் பிரதேசங்களில்

மீண்டும்யூதக்குடியேற்றங்கள்

ஜோர்தான் மே. கரையிலும், 'கஸா'விலும்

முதலாவது குடியேற்றம்

யு. எஸ். சமாதானத் திட்டத்தை உதாசீனம் செய்யும் நோக்கமில்லை - பிரதமர் பெகின்

ரெல்அவிவ் செப் 6

இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலுள்ள அரபுப் பிரதேசங்களில் மேலும் ஏழு யூதக்குடியேற்றங்களை அமைக்க இஸ்ரேலிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இக்குடியேற்றங்களில் நான்கு முதலில் அமைக்கப்படுமென்றும் ஏனையவை படிப்படியாக அமைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய அரசாங்கம் யூதக் குடியேற்றங்களை அதன் கட்டுப்பாட்டிலுள்ள அரபுப் பிரதேசங்களில் அமைக்க விருப்பது அமெரிக்கா முன்வைத்துள்ள மத்திய கிழக்கு சமாதானத்திட்டத்தை உதாசீனம் செய்யும் நோக்கத்தில் அல்லவென்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் அமெரிக்க அதிபருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். இக்கடிதம் அமெரிக்காவின் மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை இஸ்ரேல் கடுமையாக எதிர்ப்பதையே விளக்குகின்றது.

இஸ்ரேல் அமைக்க விருப்பதாக முடிவு செய்துள்ள முதல் நான்கு குடியேற்றங்களில் மூன்று ஜோர்தானின் மேற்குக் கரைப்பகுதியிலும் மற்றையது 'காஸர்' பள்ளத்தாக்கிலும் உருவாக விருக்கின்றது

இக்குடியேற்றங்களில் சைன்யா பிரதேசத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட யூதமக்கள் குடியமர்த்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

எகிப்திடமிருந்து கைப்பற்றிய சைன்யாப பிரதேசத்தை காம்ப்டேவிட் சமாதான உடன்படிக்கையின்படி மீண்டும் எகிப்திடம் இஸ்ரேல் இவ்வருட ஆரம்பத்தில் கையளித்திருந்தது இப்பிரதேசத்தை மீண்டும் எகிப்திடம் கையளிக்க இஸ்ரேல் எடுத்த முடிவை இப்பகுதியிலிருந்த இஸ்ரேலிய யூதர்கள் பெருமளவில் எதிர்த்து இங்கிருந்தும் வெளியேறுவதில் பிடிவாதமாக நின்றனர். பின்னர் இஸ்ரேலிய இராணுவம் மிகுந்த பிரயத்தனத்துடன் பெரும் கனரக வாகனங்களைக் கொண்டு இவர்களின் இல்லங்களை தரைமட்டமாக்கி ஒருவாறாக இவர்களை இங்கிருந்தும் அப்புறப்படுத்தினர் என்பது குறிப்பிடத்பிக்கது. (கி)

பிரதேசசபைத் தலைவர்

(வவனியா)

செட்டிகுளம் உதவிஅரசாங்க அதிபர் பிரிவின் பிரதேசசபைத் தலைவராக திரு. விசுவநாதன் மார்க்கண்டு யோட்டியின்றித் தெரிவாகியுள்ளார்.

இவர் செட்டிகுளம் கிராமோதயசபைத் தலைவரும் ப. நோ. கூ. சங்க நிர்வாக உறுப்பினரும்ஆவார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. மார்க்கண்டு சிறந்த சமூகசேவையாளரும் ஆவார்.

விஷச் சாராயம் குடித்தவர்களுக்கு கடற்படையினர் சிகிச்சை

திருவனந்தபுரம், செப்.6

கேரளா வைப்பின் தீவில் விஷச் சாராயம் அருந்தி மாண்டவர்களின் தொகை 60 பேராக இருந்துவரும் இதே வேளை இங்கு ஆறு சாராயக் கடைகள் மீது தீ வைக்கப்பட்டன.

கேரளாவின் அமைச்சர்களில் ஒருவரான திரு. வயலாரவி இந்த தீ வைப்புச்சம்பவங்கள் குறித்தும் இத்துடன் சம்பந்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் குறித்தும் பொலிசாருடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

விஷச் சாராயம் அருந்தியதினால் நூற்றுக்கணக்கானவர்கள் சிகிச்சைபெற்றுவருகின்றனர். கேரளாவில் இடம்பெற்ற ஓணம் பண்டிகையை முன்னிட்டு மதபானம் அருந்தியவர்களே விஷச் சாராயத்தினால் இவ்வாறு பெருமளவில் பாதிப்படைந்தனர்.

விஷச்சாராயத்தினால் பாதிப்படைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க கேரளவில் உள்ள கடற்படைத்தள மொன்றிலும் கடற்படை டாக்டர்கள் முன்வந்துள்ளனர். இத்தளத்தில் சுமார் 150 பேர் சிகிச்சைக்குள்ளாகியுள்ளனர். (க)

செல்வநாடுகளின் உதவிபெற

காத்திரமானபொருளாதாரக் கொள்கைவேண்டும்

வறிய நாடுகளுக்கு ஆலோசனை

லண்டன், செப் 6

செல்வந்த நாடுகளின் நிதியுதவியை வழிய நாடுகள் பெறுவதானால் அவை காத்திரமான பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருக்க வேண்டுமென்று செல்வந்த நாடுகளின் பொருளியல் நிபுணர்கள் கேட்டுக் கொண்டுள்

[7ம் பக்கம் பார்க்க]

அமெரிக்க சமாதானத்திட்டம்

பி. எல். ஓ. உயர்பீடம் பூர்வாங்க ஆலோசனை!

லண்டன் செப் 6

அமெரிக்கா தெரிவித்துள்ள சமாதானத்திட்டம் மீதான பூர்வாங்க விவாதரங்களையும், ஆலோசனைகளையும் பாலஸ்தீன இயக்கத்தலைவர் ஜனாப் யாஸிர் அரபாத்தும் ஏனைய பி. எல். ஓ. இயக்க உயர் அதிகாரிகளும் டூனிஷியாவில் நேற்று நடத்தினர்.

இந்தத் திட்டம் குறித்து பாலஸ்தீனர்களின் அபிப்பிராயத்தை மொரோக்கோவில் இன்று ஆரம்பமாகவுள்ள அரபு நாடுகளின் உச்சி மகாநாட்டில் ஜனாப் யாஸிர் அரபாத் விளக்கிக் கூறுவாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க சமாதானத்திட்டத்தை எகிப்து, சூடான் ஆகியன வரவேற்றுள்ள அதே வேளை சிரியா இதற்கு எதிர்ப்புத்தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் தரப்பில் அமெரிக்கச்சட்டத்தை கடுமையாக எதிர்த்து பிரதமர் பெகின் அமெரிக்க அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இத்திட்டம் மத்திய கிழக்கில் ஒரு சோவியத் இராணுவத்தளம் உருவாக வழிவகுக்கின்றது என்று தெரிவித்துள்ளார். (கி)

ஜனதிபதி வேட்பாளர்

சிறிமா அணியில் தொடர்ந்து இழுபறி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் [சிறிமாவோ பிரிவு] ஜனதிபதி தேர்தல் வேட்பாளரைத் தெரிவுசெய்வதில் தொடர்ந்து 'இழுபறி' நிலவுகிறது.

திரு. ஹெக்டர் கொப்பேகடுவவை வேட்பாளராகத் தெரிவுசெய்ய முயற்சிகள் நடைபெறும் அதே நேரத்தில் திரு அநுரா பண்டாரநாயக்காவை வேட்பாளராகத் தெரிவுசெய்ய பெருமளவிலான 'கையெழுத்துவேட்டை' நடைபெற்றுவருகிறது.

இன்று நடைபெறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் [சிறிமாவோ பிரிவு] முக்கிய கூட்டத்தில், வேட்பாளர் யார் என்பது தெரியவரும்.

போலந்தில் ஆர்ப்பாட்டங்கள்

4பேர்பலி! 37காவல்படையினர் படுகாயம்!

வார்ஸோ, செப் 6

கடந்த செவ்வாய்க்கிழமை சொலிடாரிட்டி தொழிற்சங்க ஆதரவாளர்களால் போலந்தின் பிரதான நகரங்களில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் வெற்றியளித்துள்ளதாக அச்சங்கத்தின் ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

செம்புத் தொழில் இடம்பெறும் றூபின் நகரில் தொழிற்சங்கவாதிகளுக்கு ஆதரவாக ரகசியமாக இயங்கி வருபவர்கள் வெளியிட்ட சுற்றறிக்கை ஒன்றிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டங்களின் போது போலந்தின் பிரதான நகர் ஒன்றில் நான்கு சொலிடாரிட்டி தொழிற்சங்க ஆதரவாளர்கள் போலந்து காவல்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்

இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் ஆன்மசாந்திக்காக எதிர்வரும் வியாழக்கிழமை 1 நிமிடநேர மௌனஅஞ்சலி செலுத்தும்படியும் வழிபாட்டு ஆராதனைகளில் கலந்து கொள்ளும்படியும் அச்சுற்றறிக்கையில் மேலும் கேட்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்க ஆதரவாளர்களுடன் பொலிசாரும் இராணுவத்தினரும் மோதிக் கொண்டதில் 37 பொலிசாரும் இராணுவத்தினரும் காயமடைந்தனர் இவர்களில் படுகாயமுற்ற 17 பேர் வைத்தியசாலையில் இருந்து வருகின்றனர். (கி)

வடஇந்தியவெள்ளப்பெருக்கில் இறந்தோர் தொகை 270

புதுடில்லி, செப்.5

வட இந்தியாவில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 270 ஆக உயர்ந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இவ் எண்ணிக்கை 150 ஆக இருந்தது.

வெள்ள அனர்த்தம் மெகுவாகவிருந்த பீகார், ஒரிஸ்ஸா, உத்தரப்பிரதேசம் ஆகிய இடங்களில் லட்சக்கணக்கானோர் அகதிகளாகவுள்ளனர். உத்தரப் பிரதேஷின் பள்ளத்தாக்குப்பகுதியொன்றிலிருந்து சுமார் இரண்டு லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

மீட்புப் பணிகளிலும், நிவாரணவேலைகளிலும் 5000 சாதாரண படகுகளும், 35 மோட்டார் படகுகளும் இராணுவப் படகுகளுடன் சேவையிலீடுபட்டுள்ளன.

பீகாரில் வெள்ளப்பெருக்கு நீரினால் குடி நீர் நிலைகள் அசுத்தமாவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இங்கு 38 மாவட்டங்களில் 84 லட்சம் பேர் பாதிப்படைந்துள்ளனர். அறுவடைக் காலத்தை நெருங்கிக் கொண்டிருந்த 12 லட்சம் ஹெக்டர் ஏக்கர் பயிர்ச் செய்கை நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. 64,000 வீடுகள் சேதமடைந்துள்ளன.

ஒரிஸாவில் கடற்படைக் கப்பல்கள் ஏனைய மாநிலங்களிலிருந்து உணவுத் தானியங்களை கொண்டுவந்து விநியோகிக்கின்றன. 5 கோடி ரூபாய் நிதியை வெள்ள நிவாரண வேலைகளுக்கென ஒரிஸா மாநில அரசு ஒதுக்கியுள்ளது (கி)

மசகு எண்ணெய் விலையைஅதிகரிக்க சவூதி யோசனை

லண்டன், செப். 6

ஒரு பீப்பா மசகு எண்ணெயை 2·3 டாலர்களால் அதிகரிக்க சவூதி அரேபியா

(7—ம் பக்கம் பார்க்க

மணிவாக்கு

பெரு முயற்சி செய்து பெரும் பொருள் சம்பாதித்தாலும் ஊழினளவன்றி அதிகமாக அனுபவித்தல் இயலாது.

— ஔவையார்

நமது நோக்கு

பீகாரின் பத்திரிகைப் பூகம்பம்

இந்தியாவின் வடகிழக்கு மாநிலம் இந்தியாவின் முதல் ஜனாதிபதி 'ராஜன்பாபுவை' நாட்டுக்களித்த பெருமையுடையது; அதேசமயம் அங்கு வாழும் ஏழை மக்கள் அடிக்கடி பூகம்பத்துக்கு ஆளாவதும் உண்டு.

இன்று பீகாரைக் கலக்கும் குழப்பம் அந்த மாநில அரசின் பத்திரிகை மசோதாவே! இந்தியா முழுவதையும் அது ஆட்டி வைத்திருக்கிறது. சென்றசனிக்கிழமை நாடனைத்திலும் பத்திரிகை வேலைநிறுத்தம் நடைபெற்றதென்று செய்தி கூறுகிறது. பீகார் மாநில ஆட்சி இந்திரா காங்கிரஸின் கையில் என்றால் இம் மசோதாவிற்கு பிரதமர் இந்திராவின் அனுசரணை உண்டு என்று யூகிக்க இடமுண்டு.

ஒரு நாள் வேலைநிறுத்தத்துடன் நிற்பதாக அம் மாநிலப் பத்திரிகையாளரின் செயற்பாட்டுக் குழு கருதவில்லை. இப்புதிய மசோதா ஜனாதிபதியின் அங்கீகாரம் இன்னும் பெறாத நிலையில் அரசாங்கத்தின் கண்களைத் திறக்கக் கூடிய தீவிர செயலில் ஈடுபடுவதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

காரணம்: பிரதமர் இந்திராவின் ஆதரவு புதிய பத்திரிகை வாய்ப்பூட்டுக்கு உண்டு. எனவே ஏனைய மாநிலங்களிலும் இது பரவ இடமுண்டு.

பத்திரிகைக் கட்டுப்பாடு சாதாரண காலத்தில் ஒரு முரண்பட்ட செயலென்று விளங்காதவர் எவருமில்லை. எனவே சட்டுப்பாடுக்கு போதிய காரணம் தேவை. இவ்வாறு கூறும் போது நாம் எவ்வித கட்டுப்பாடற்ற முறையில் பத்திரிகைகள் நடைபெறுவதை ஆதரிக்கிறோமென்றக் கருத்தல்ல.

பத்திரிகா தர்மம் இலகுவில் விளங்கப்படுத்தக்கூடிய விடயமல்ல; ஆயினும் பத்திரிகையாளர்களுக்கும் வாசகப்பெருமக்களுக்கும் ஒரு உள்ளுணர்வு போல் புரியும் கருத்து அது.

நாட்டை, சமூகத்தை கெடுத்து அழிக்கும் பணியில் பத்திரிகை ஒன்று செயற்படுவதானால் அதனை நீக்க எந்த அரசுக்கும் எக்காலத்திலும் அதிகாரம் உண்டு. அதே காரணத்தைக் கொண்டு எந்தப்பத்திரிகைக்கும் தடை விதிக்கும் பாங்கில் சட்டம் இயற்றுவது பத்திரிகையின் முக்கிய பணியை பாதிக்கும் செயல்.

குறிப்பிட்ட பீகார் மசோதா என்ன சொல்கிறது? அம் மாநிலத்தின் பத்திரிகைகள் காரசாரமான கண்டனங்களையும், நேர்மையற்ற தாக்குதல்களையும் தவிர்க்க வேண்டுமென்றும்; இத்தகைய செயல்கள் மக்களைப் பயமுறுத்திபணம் பறிக்கும் செயல்களாக முடியுமென்பதால், இக்குற்றத்துக்கு ஆளாகும் பத்திரிகை தண்டனைக்குரியதாகுமென்று குறிப்பிடுகிறது.

இதற்கு பத்திரிகையாளர்கள் எதிர்ப்பு எவ்விதத்திலும் வியப்பானதல்ல. இந்தச் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு பழிவாங்க வேண்டுமென்ற பத்திரிகையை அரசு சுருட்டிக் கட்ட முடியும். எனவே ஜனநாயகம் எங்கே!

இந்தியா ஒரு பரந்த பண்புடைய நாடு இந்திய சுதந்திர இயக்கம் தீவிரம்பெற்ற காலத்தில் 'பஞ்சாப் படுகொலையை' வெள்ளையரின் அட்டகாசம் மிகுந்த துன்பத்தின் உச்சக்கட்டத்தில் 'அம்றிற்சபலார் பத்திரிகா வெளுத்து வாங்கின' விமர்சனங்களையும் கண்டனங்களையும் வாசித்தவர்களின் இரத்தம் கொதித்தது! பத்திரிகையை ஒரு ஏகாதிபத்திய அன்னிய அரசு நிற்பாட்டியது. அது இயற்கை.

சுதந்திர நாட்டில் இவ்வித படுகொலையை கண்டிக்கும் சுதந்திரம் பத்திரிகைகில்லாவிட்டால் அது மூடப்படுவது உத்தமமானது.

ஜனநாயக ஆட்சியிலும் அரசு சில செயல்களைத் தீவிரமாக எதிர்ப்பின்றி, மக்கள் கருத்துக்கிடங் கொடாமல் செய்து முடிக்க எத்தனிப்பது எங்கள் நாட்டில் நாம் காணமுடிகிறது.

எனவே இவ்வித சர்ச்சைக்குரிய விடயங்கள் பத்திரிகையின் விமர்சனத்துக்குரியதல்லவென்று அரசு சட்டமூலம் கட்டுப்படுத்த முடியுமானால், பத்திரிகைச் சுதந்திரம் ஓர் அர்த்தமற்ற சொற்கூட்டம், பத்திரிகையாளர் மட்டுமல்ல, நாட்டின் பொதுஜன அபிப்பிராயமே இதனை எதிர்த்துப் போராட வேண்டிய கடமையுடையது

பத்திரிகையாளன் என்ற அடிப்படையில், பத்திரிகையில் இடம்பெறும் பொறுப்பற்ற கேலிகளையும், கிண்டல்களையும், சமுதாய ஒற்றுமையைக் கெடுக்கும் வகுப்புவாதத்தைத் தூண்டும் செய்திகளையும் கருத்துக்களையும் நாம் ஆதரிப்பதாக எவரும் கருதப்படாது.

தம்மைத் தாமே கட்டுப்படுத்திக் கொள்ளும் பொறுப்பு ஒவ்வொரு தரமான பத்திரிகைக்கும் உண்டு அதற்கே வாசகப் பெரு மக்களின் ஆதரவுண்டு. ஜனநாயக ஆட்சியில் அரசுக்கு முட்டுக்கட்டையாக நடந்து கொள்வதும் பத்திரிகா தர்மம் ஆகாது.

எனவே இவ்விதபிற்போக்கான நடவடிக்கையை பீகார் மாநிலம் ஆரம்பித்திருப்பது ஆட்சியின் பலவீனத்தை வெளிப்படுத்துகின்றது

தமுடைய ஆட்சிக்கு தாக்கம் ஏற்படக் கூடாதென்ற காரணத்தால் பிரதமர் இந்திரா இதனைக் கண்டிக்கத் துணியவில்லைப் போலும்!

ஏற்கனவே, பத்திரிகைகளில் கைவைக்கும் பேர்வழி இந்திரா வென்ற சந்தேகம் மக்களுக்குண்டு; அதே சமயம் பொதுஜன விருப்பு வெறுப்பை நிராகரித்து அதன் விளைவையும் அறிந்த அனுபவமும் அவருக்குண்டு.

சட்டம் ஜனாதிபதியின் கைச்சாத்துக்குப் போகுமுன் இந்திராவின் அரசியல் சாதுர்யம், நிலைமையைச் சமப்படுத்த வேண்டும்.

தடிமனும் காய்ச்சலும் விரைவில் குணமடைய வேண்டும் என்று விரும்புகிறீர்களா?

நுண்ணுயிர் கொல்லிகளைப் பாவிப்பதில் கவனம் தேவை

விடியற்காலை படுக்கையில் இருந்து எழுந்திருக்கும் போது உங்கள் உடலெல்லாம் ஒரே நோவாக இருக்கிறது. தொண்டை கட்டிப்போய்விட்டதுபோல் தோன்றுகிறது. தலைவலி தாங்கமுடியாதிருக்கிறது மெல்லிய காய்ச்சல் தெரிகின்றது. தொடர்ந்து காய்ச்சல் ஏறுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. என்ன செய்வீர்கள்? உங்கள் அருகில் உள்ள வைத்தியரிடம் செல்வீர்கள். ஏழு எட்டு வகையான மாத்திரைகளையும் ஒரு கலவை மருந்தையும் அவர் தந்துவிட்டாராலுல் உங்களுக்கு மிகவும் திருப்தியாய் இருக்கும். அப்படியில்லாமல் அவர் "கொஞ்சம் பொறுங்கள். இதற்கு இப்போது அவசரமாக மருந்து குடிக்கவேண்டியதில்லை. இன்று பகல் படுக்கையில் இருங்கள். நாளைக் காலையில் என்னை வந்து சந்தியுங்கள்" என்று சொல்லிவிட்டார் என்று வைப்போம். உங்கள் பிரதிபலிப்பு என்னவாக இருக்கும்?

கோகிலா மகேந்திரன்

"இவருக்கு ஒன்றும் தெரியாது. வருத்தத்தைக் கண்டு பிடிக்கத்தெரியாது. சும்மா இழுத்தடிக்கிறார். வேறு ஒரு வைத்தியரிடம் போவோம்" என்று நினைத்துக்கொண்டு அடுத்த வைத்தியசாலைக்குச் செல்வீர்கள். இல்லையா? ஆம் இப்படியான ஒரு மனப்பாங்கு இப்போது எம்மில் பலரிடம் உருவாகி வருகிறது. அவசரம்! அவசரம்!! எந்த விடயத்திலும் பரபரப்பும் அவசரமும்!! வருத்தம்வந்தாலும்கூட அந்த வருத்தம்என்னஎன்றுதெரிந்து கொள்வதற்கு முன்பாகவே அது மாறிவிடவேண்டும் என்ற அவசரம்.

தலையிடியும், காய்ச்சலும் பல எண்ணிலடங்காத நோய்களுக்குத் தொடக்க அறிகுறிகளாக இருக்கும். அதைத் தொடர்ந்து என்ன நடைபெறப்போகிறது என்று அறிந்கொள்வதற்கு முன்பே மருந்து தரவேண்டும் என்று நீங்கள் விரும்பினால் பல நுண்ணுயிர் கொல்லிமாத்திரைகளை அள்ளி அவர் உங்களுக்குத் தந்துவிடலாம். அதனால் ஒருவேளை உடனடியாக நீங்கள் மனநிறைவு பெற்றுக்கொள்ளலாம் ஆனால் அதேவேளை அவர் உடனடியாக மருந்து தரத் தயக்கம் காட்டுவாராயின் அந்தத் தயக்கத்தின் பின்னணியில் பல காரணங்கள் இருக்கவேசெய்கின்றன.

பயன்பாட்டின் அளவு

சாதாரண தடிமன், பிடிசுரம் எனப்படுகின்ற 'இன்புளுவென்சா' வைரசினால் ஏற்படுகின்றன. நியூமோனியா ஆகியவற்றிற்கெதிராகத் தொழிற்படக்கூடிய நுண்ணுயிர்க்கொல்லி மாத்திரைகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. தொண்டை, மூளை அழற்சி, பற்றீரியங்களினால் உண்டாகும் நியூமோனியா போன்ற சில நோய்களுக்கு எதிராக மாத்திரமே இவை தொழிற்படுகின்றன. மொத்தமாக ஏற்படக்கூடிய சுவாசத் தொகுதி நேரங்களிலே 5 வீதம் நோய்கள் மாத்திரமே நுண்ணுயிர் கொல்லிகளினால் மாற்றப்படக் கூடியவையாக இருக்கின்றன. ஆனாலும் ஆரம்ப அறிகுறிகளைப் பொறுத்த வரையில் இந்த 5வீதம்நோய்களுக்கும் நுண்ணுயிர் கொல்லிகளினால் பாதிக்கப்படாத மிகுதி 95 வீதம் நோய்களுக்கும் இடையில் அதிக அளவு வித்தியாசங்கள் இல்லை. குறிப்பிட்ட நோய்க்கு நுண்ணியிர் கொல்லியைப் பாவிப்பதனால் பயன் இருக்குமா இல்லையா என்பதை நோய் தொடங்கிய 24 மணி நேரத்தில் ஒரு சிறந்த வைத்தியர் அடையாளம் கண்டு கொள்வார் ஆகவே நோயைச் சரியாக இனம் காண்பதற்குத் தான் அவர் உங்களிடம் இருபத்து நாலு மணி நேர அவகாசம் வேண்டுகிறாரே தவிரக் கண்ட கண்ட நுண்ணியிர் கொல்லிகளை அள்ளித்தரத் தெரியாமல் கேட்கவில்லை என்டதை நீங்கள் மிகத்தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஒவ்வாமை

ஒவ்வாமை என்ற சொல்லப்படக்கூடிய 'அலர்ஜி' நிலையை இந்த மாத்திரைகள் ஏற்படுத்தக் கூடும்என்பது இவற்றைக் கண்டபடி அருந்துவதில்உள்ள இன்னொரு ஆபத்தாகும். குறிப்பிட்ட ஒரு நுண்ணுயிர் கொல்லியை நாம் முதல் முறையாக உள்ளெடுக்கும் போது பாதிப்புகள் எதுவும் தோன்றாதிருக்கலாம். பல சந்தர்ப்பங்களில் அதே மாத்திரையைப் பத்து முறைக்குமேல் எடுத்தபோதும் பிரச்னை ஒன்றும் இல்லாதிருந்துவிட்டு அதன் பின் ஒரு முறை திடீரென இந்நிலை வெடித்திருக்கிறது. பொதுவாக எங்களில் பத்து வீதமானவர்கள் நுண்ணுயிர் கொல்லி மருந்துகளுக்கு ஒவ்வாமை காட்டுகிறார்கள். இது புறக்கணித்து விடக்கூடிய நூற்று வீதம் அல்ல என்பது கவனத்தில் எடுக்கப்படவேண்டியது இந்த ஒவ்வாமைத் தாக்கங்கள் மிக இலேசான தோல்த் தடிப்புகளில் இருந்து மரணத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் வரையில் மாறுபடுகின்றன. சில மனிதர்களில் இந்த நுண்ணுயிர் கொல்லிகளின் ஒரு மிகச் சிறிய அளவே பாரிய விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது.

தனது குழந்தைக்குக் கொடுக்கவென ஒரு நுண்ணுயிர்க் கொல்லியைச் சீனிக் கரைசலில் கரைத்துவிட்டு அதன் இனிப்புச் சுவை போதுமானதா என்று பார்ப்பதற்காக அதன் ஒரு துளியை நாவில் விட்டுப் பார்த்ததால் மயக்கமடைந்ததும் இன்னொரு நுண்ணுயிர் கொல்லி கலந்த மருந்து ஒன்றைத் தோல் நோய் ஒன்றுக்குத் தடவிய சில நிமிடங்களில் பாராதூரமான ஒவ்வாமைத் தாக்கத்தினால் பீடிக்கப்பட்டது மான நிகழ்வுகளைப் போன்ற பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

ஒவ்வாமைத் தாற்கங்களை உருவாக்குவதில் பிரதான இடம் பெனிசிலின் மருந்துக்கு உண்டு. ஆயினும் இதுவே இன்று எங்களால் பாவிக்கப்படும் பிரதான நுண்ணுயிர் கொல்லி மருந்தாகவும் இருக்கிறது. அமெரிக்க நாட்டில் ஏறத்தாழ ஆயிரம் இறப்புகள் பெனிசிலின் ஒவ்வாமையால் ஏற்பட்டவை கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. பெனிசிலின் ஒவ்வாமைத் தாக்கங்களினால் ஏற்பட்ட விளைவுகளைக் கோட்டிசோன் அதிரினலின் போன்ற ஊசி மருந்துகளினால் பெரும்பாலும் குணப்படுத்தலாம். ஆனாலும் நிச்சயமாகக் குணப்படுத்தி விடலாம் என்று கூற முடியாது.

நுண்ணுயிர்களின் இயற்கைச் சமநிலை

கோடிக்கணக்கான பற்றீரியங்களும் பங்கசுக்களும் எப்போதும் எமது வாய், தொண்டை, உணவுக் கால்வாய்த் தொகுதி ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. அவற்றில் சில எமது சமிபாட்டில் உதவுகின்றன. பெருங்குடல் பகுதியில் வாழும் வேறு சில எமது சமிபாட்டில் உதவுகின்றன. பெருங்குடல் பகுதியில் வாழும் வேறு சில எமக்குத் தேவையான விற்றமின்களின் ஒரு பகுதியை உற்பத்தி செய்கின்றன. இன்னும் பல நன்மை செய்யாவிட்டாலும் தீமை எதுவும் செய்யாதிருக்கின்றன. நாம் நுண்ணுயிர் கொல்லிகளை உட்கொள்ளும் போது இவற்றில் பல அழிக்கப்படுவதால் இயற்கையின் நுண்ணுயிர்ச் சமநிலை முறியடிக்கப்படுகின்றது. இதனால் நோயை உண்டாக்கும் வல்லமை படைத்தவேறு நுண்ணுயிர்கள் மிகவேகமாகப்பரவி வளர நல்லதோர் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது உண்மையில் பல இடங்களில் பெனிசிலின் உட்கொண்டமை காரணமாக ஒருவகை நியூமோனியா உண்டாவதற்கு வழி காணப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் வாய் அவியலும் வேறு சில வேளைகளில் வயிற்றோட்டம் போன்ற நோய்களும் ஏற்படுகின்றன.

விகாரங்கள் தோன்றுதல்

மேலும் இம்மருந்துகளை அடிக்கடி உட்கொள்வதனால் நுண்ணுயிர் கொல்லிகளினால் பாதிக்கப்படாத விகாரமடைந்த புதிய பற்றீரிய இனங்கள் தோன்றுவதற்கு வழி அமைக்கப்படுகிறது.

முதன் முதலில் பெனிசிலின் கண்டு பிடிக்கப்பட்ட போது ஸ்ரபைலோ கோக்கசு என்ற பற்றீரியாவினால் உண்டாக்கப்பட்ட குருதித் தொற்றுக்கள் எலும்புத் தொற்றுகள் போன்றவற்றுடன் வெற்றிகரமாகப் போராடக் கூடியதாய் இருந்தது சில வருடங்களின் பின் பெனிசிலினால் பாதிக்கப்படாத இனம் தோன்றிவிட்டமையால் ஸ்ரெப்ரோமைசின் போன்ற மருந்துகளைப்பாவிக்க வேண்டி ஏறபட்டது. சில காலத்தின் பின்னர் அவையும் முடியாது என்று ஆகவிட ரெற்றாசைக்கிளின் பிரபல்யம் அடைந்தது. இச்சங்கிலி இத்துடன் நின்றுவிடக்கூடியதல்ல. மேலும் மேலும் இந்நிலை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. புதிய புதிய நுண்ணுயிர்க் கொல்லிகள் தயாரிக்கப்படுகின்றன, அவற்றினால் பாதிப்படையாத புதிய நுண்ணுயிர் இனங்களும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. ஆகவேதான் ஆபத்தில் உதவுவதற்காக எரித்திரோ

[5ம் பக்கம் பார்க்க]

★ ஜனாதிபதி தேர்தல்

தமிழ்மக்களை உறுத்தும் பிரச்னைகளை தெளிவுபடுத்துவார்களா?

ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் நடக்க இருப்பதால் பெரிய சிங்களக் கட்சிகளின் அபேட்சகர்கள் இப்பொழுதாகிலும் இந்திய முதுபெரும் தலைவராக விளங்கிய அமரர் ரி.ரி கிருஷ்ணமாச்சாரி இந்திய அரசியல் சாசனத்தில் இந்தி மொழியை அரசாங்க மொழியாகப் புகுத்தும் தறுவாயில் கூறியவற்றை நினைவு கூர்வது நல்லது.

தனிச்சிங்களமசோதா இலங்கைப் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொண்டபொழுது, அமரர் ஜீ ஜீ. பொன்னம்பலமும் திரு. கிருஷ்ணமாச்சாரியார் இந்தி மொழித் திணிப்பைப் பற்றிச் சொன்னதையே கூறி, தனிச் சிங்கள மசோதா நாட்டைப் பிரிக்க வழிவகுக்கும் என எச்சரிக்கை செய்தார்.

மக்கள் கருத்து

தனிச் சிங்கள மசோதாவை தமிழ்மகன் ஒருவனும் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைச் சிங்கள மக்களும், சிங்களத்தலைவர்களும் உணர வேண்டும்.

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களைப்பொறுத்த மட்டில், தனிச்சிங்கள மசோதா அவர்களை மிகவும் அவமானப்படுத்தும், இழிவுபடுத்தும் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக்கும் மசோதாவாக இருக்கின்றது. இதை அவர்கள் ஒரு அடிமைச் சின்னமாகக் கருதுகிறார்கள்.

நாட்டின் அமைதியைக்குலைத்ததும் பல இனக்கலவரங்களுக்கு அடிகோலியாக இருந்ததும் சில சுயநலச் சிங்கள அரசியல் வாதிகளால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பெற்ற தனிச்சிங்கள சிங்கள மசோதாவாகும். இன்னும் இலங்கையின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்ததும் இந்த தனிச் சிங்கள மசோதாவே.

இந்த மசோதா தமிழ்பேசும் மக்களுக்கு ஏற்படுத்திய தீங்குகளுக்கு ஒரு பரிகாரம்காணும் முறையில் ஜனாதிபதித் தேர்தலில் குதிக்கஇருக்கும் சிங்களக் கட்சிகளின் அபேட்சகர்கள் சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளையும் அரசாங்க மொழிகளாக்கவிருப்பம் காட்டாவிடில் இவர்கள் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற வாய்ப்பற்றவர்களாவார்கள். இன்னும் தமிழ் மக்களின் ஆதரவைக் கேட்க இவர்களுக்கு ஒருவிதமான உரித்தும இல்லை

சர்வகலாசாலைகளுக்கு அனுமதி வழங்கும்பொழுது அடுத்தடுத்து அதிகாரத்தைக் கைப்பற்றிய அரசுகள் கையாண்ட தரப்படுத்தல் முறை தமிழ் இளைஞர்களை மிகவும்பாதித்து விரக்தியடையச் செய்திருக்கின்றது.

வாக்குக் கொடாவிடில்

தனிச் சிங்கள மசோதாவை மாற்றி மேற்கூறிய வகையில் திருத்தத்தைக் கொண்டுவர இவர்கள் வாக்குக்கொடாவிடில் தமிழ்மக்கள் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் அல்லது தங்களின் எதிர்ப்பையும் மனோநிலையையும் வெளிப்படுத்த ஒரு தமிழ் மகன் இத் தேர்தலில் பங்குபற்றுபவராய் இருந்தால் அவரை ஆதரிக்கவேண்டும்.

பெரிய சிங்களக் கட்சிகளின் அபேட்சகர்கள் பின்னே கூறப்பெற்ற தமிழ்மக்களை உறுத்தும் விடயங்களைப்பொறுத்த மட்டில் தங்களின் நிலைஎன்ன என்பதைத் திட்டவட்டமாகக் கூறித் தெளிவுபடுத்த வேண்டும்.

1. தனிச் சிங்கள மசோதா.
2. சர்வகலாசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் தரப்படுத்தல்முறையாஅல்லது திறமைஅடிப்படையிலா?,
3. தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கை முழுவதிலும் சமவாய்ப்பும், பாதுகாப்பும் கிடைக்குமா?
4. அரசாங்கசேவைக்கு ஆட்சேர்ப்பதில் கோட்டா முறையா? திறமை அடிப்படையா? அல்லது பாராளுமன்ற அங்கத்தவர்களின் துண்டுமுறையா?
5. இந்திய மக்களின் பிரஜா உரிமை.

என்னுடைய தாழ்மையானதும், தீர்க்கமானதுமான அபிப்பிராயமென்னவென்றால் தமிழ் மக்களைப் பீடித்த பிரச்னைகளை மாவட்ட சபைகள் அடிப்படையிலோ அல்லது பண்டாரநாயக்கா கொண்டுவரவிருந்த பிராந்திய சபைகள் மூலமாகவோ தீர்க்க இயலாதென்பதே.

இவைகளெல்லாம் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் அல்பேட் கொடமுனை என்பவராலும், பண்டாரநாயக்காவினாலும் தமிழர்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் என்பதையும் சேர். பொன்இராமநாதன் இந்த நடவடிக்கைகளை கடுமையாக எதிர்த்தார் என்பதையும் நாம் இப்பொழுது மனதிற்கொள்ள வேண்டும்.

அப்பாத்துரை விநாயகமூர்த்தி.
மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

நுண்ணுயிர்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மைசின் போன்ற சில புதிய மருந்துகளை வைத்தியர்கள் சேமிப்பில் வைத்துக் கொள்ள முயலுகின்றனர்.

ஆகவே எடுத்ததற்கெல்லாம் உங்கள் வைத்தியர் நுண்ணுயிர் கொல்லி மருந்துகளைத் தந்துவிட வேண்டும் என்று எதிர் பார்க்காதீர்கள். உங்கள் அப்போதைய வருத்தத்திற்கென இம் மருந்துகள் ஒரு தகுதி வாய்ந்த வைத்தியரினால் தரப்பட்டிருந்தால் ஒழியவேறு எக்காரணம் கொண்டும் நீங்களாக இந்த நுண்ணுயிர் கொல்லிகளை உட்கொள்ளாதீர்கள் நீங்கள் தொய்வு, சில உணவுகளுக்கு ஒவ்வாமைத் தாக்கம் காட்டுதல் போன்ற வற்றினால் இடையிடையே பாதிக்கப்படுபவராயின் எந்த வைத்தியரிடம் சென்றாலும் தவறாமல் அவரிடம் அதைப்பற்றிச் சொல்லிவிடுங்கள்.

ஆனாலும்நீங்கள்குறிப்பிட்ட நோய்க்காக நுண்ணுயிர் கொல்லிகளை அருந்தவே வேண்டும் என்று உங்கள் வைத்தியர் முடிவு செய்வராயின் பயமின்றி அவரைப்பின் பற்றுங்கள். அவர் நோய் எது என்று அடையாளம் கண்டு, இந்த மருந்துகொடுப்பதெனத் தீர்மானித்தால் அவருக்கு முழு ஒத்துழைப்பும் கொடுக்கவேண்டியது உங்கள் கடமையாகும்.

(ஆதாரம்: அல்பேட் மெய்சல்)

'நாட்டில் அமைதிபேணுவதே பொலிசாரின் கடமையாகும்'

பொலிஸ் பொறுப்பதிகாரி கூறுகிறார்

[புலோலி நிருபர் திருச்செல்வம்

"நாட்டில் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்தி அமைதியைப் பேணுவதே பொலிசாரின் முக்கிய கடமையாகும். இப்பகுதிகளில் பொதுமக்களுக்கும்—பொலிசாருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு, பரஸ்பர நல்லெண்ணம் இல்லாமலிருப்பதினாலேயே அமைதியை நிலைநாட்டுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன, பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவை ஏற்படுத்தி அமைதியை நிலைநாட்டச் சமூகசேவை நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டு வந்துள்ள திரு. விஜயவர்த்தனா நமது நிருபரிடம் தெரிவித்தார். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தொடர்ந்து குறிப்பிட்டதாவது:

'பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியிலே கல்வியறிவால்மேம்பட்டவர்களும் பண்பாட்டால் உயர்ந்தவர்களும் வாழ்வதை நான் காண்கின்றேன். ஆனால் இப்பகுதில் பொலிசார்-பொதுமக்களுக்கிடையியே நெருங்கிய தொடர்பும் பரஸ்பர நல்லெண்ணமும்' இல்லாமையினாலேயே சில விரும்பத்தாக சம்பவங்கள் நிகழக்காரணமாகியிருந்துள்ளன.

நெல்லியடிச் சந்திக்கு நான் ஜீப்பில் சென்றபோது ஜீப்பைக் கண்ட பொதுமக்கள் சிலர் பயந்து ஓடியதைக் கண்டேன். இதனால் நான் மிகவே தனையடைந்தேன். பொலிஸ் ஜீப்பைக் கண்டதும் பொதுமக்கள் ஓடாது ஜீப்பை நோக்கி வரக் வேண்டும். பொதுமக்களின் நலனைப்பாதுகாத்து] அமைதியை நிலவச் செய்வதற்காகவே பொலிசார் கடமை புரிகின்றார்கள் என்பதை மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்.

'பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். இதன்மூலம் பொலிசார் பொதுமக்கள் நல்லுறவு வளர்ந்து ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலைநிறுத்தப்பட்டு அமைதிபேண வழிகுக்கப்படும். பொதுமக்கள் அச்சமின்றி வாழும் நிலையை ஏற்படுத்துவதே பொலிசாரின் முக்கிய கடமையாகும். ஆனால் இதற்குப் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு இன்றியமையாதது. சமூகசேவை நிறுவனங்கள் இதில் முக்கிய பங்கெடுக்கவேண்டும்.

மறைந்த பல்கலைக்கழக உதவிப்பதிவாளர்



1920-ம் ஆண்டு உரும்பராய் கிராமத்தில் பிறந்த திரு. பொன்னம்பலம் செல்வநாயகம் தனது சிறுவயதிலேயே பெற்றோரை இழந்தார் சகோதர பலமுமின்றித் தனியொருவராக வாழ்ந்த இவர் தனது இளமைக் கல்வியைச் சிறப்பாக முடித்தபின் 1947-ல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் எழுதுவினைஞராகத் தனது சேவையை ஆரம்பித்தார். 1954-ம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் புதிய அமர்விடமாகிய பேராதனையில் தனது கடமையைப் பொறுப்பேற்றார். பல்கலைக்கழக நிர்வாகத்தில் மிகவும் கஷ்டமானதும் முக்கியத்துவம்வாய்ந்ததுமான பரீட்சைப் பகுதியில் பல வருடகாலம் கடமையாற்றித் தனது பணியை மிகுந்த கடமையுணர்வுடன் சிறப்பாகச்செய்து, பலரது பாராட்டையும் பெற்றார்.

அனுபவத்துடனும் முதிர்ந்த நிர்வாகத் திறமையுடனும் விளங்கிய திரு. செல்வநாயகம் 1974-ம் ஆண்டிலிருந்து 1981-ம் ஆண்டுவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள், மாணவ அனுமதிகள் ஆகியவற்றுக்கு பொறுப்பான சிரேஷ்ட உதவிப் பதிவாளராகச் சிறப்பப் பணியாற்றியதன்காரணத்தினால் பல்கலைக்கழக ஊழியர்களினதும் மாணவர்களதும் பாராட்டைப்பெற்றார். இவரின் சேவையின் புனிதத்தை உணர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் 1980-ம் ஆண்டு பட்டம் அளிப்பு விழாவில் இவருக்கு M. A. பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. அறிவினால் உயர்ந்த சான்றோருக்குப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் பல்கலைக்கழகம், பணியினால் உயர்ந்த பண்பாளனாகிய திரு. செல்வநாயகத்திற்கு வழங்கிய M. A. பட்டம் அவரது தூய்மையானசேவைக்குக்கிடைத்த பரிசாகும்.

செய்யும் தொழிலேதெய்வம் என்ற முதுமொழிக்கிணங்க தனது தொழிலின் மகத்துவத்தை உணர்ந்து சிறப்பாகப் பணிபுரிந்த பெருமகனார் ஓய்வெடுத்த ஒரு வருட காலத்திற்குள் காலன் அரவணைத்துக் கொண்டான். சேவையின் சின்னமாக வாழ்ந்த இவரின் மறைவு பல்கலைக்கழகத்தில் பணிபுரியும்சகலரையும் உள்ளமுருக, கண்கலங்கவைத்துள்ளது தனது கடமையுடன் மட்டும் நிற்காது, பல்கலைக்கழக ஊழியரின் நலன்களையும் கவனித்தார். பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழிற்சங்க சேவையாளர் சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இருந்த திரு. பொன்னம்பலம் செல்வநாயகம் மனம், வாக்குக்காயம் ஆகிய திரிகரணங்களாலும் தனதுதொழிலின்சிறப்பிற்காக தனது வாழ்வையே அர்ப்பணித்தவர்.

அன்னார் பெற்றெடுத்த 9 தவப்புதல்வர்களும் இன்று பேரோடும் புகழோடும் உயர் பதவிகளை வகித்து வருகிறார்கள். பல்கலைக்கழக வளர்ச்சிக்காகத் தனது வாழ்வையே அர்ப்பணித்த அவரின் பணிவான தோற்றம், கவர்ச்சியான பேச்சு, துன்பமடைந்தவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் அருள் தன்மை ஆகிய சிறந்த பண்புகளை நினைத்து பல்கலைக்கழக ஊழியர்களாகியநாங்கள் கண்கலங்கி நிற்கின்றோம். அவரின் சிரார்த்த தினமாகிய இன்று அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நா. கணேசலிங்கம்

வேலையிலிருந்து இடைநிறுத்தம்

[கோண்டாவில்]

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நுகர்ச்சி முகாமையாளர், இயக்குநர் சபையினால் தற்காலிசமாக வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இவர்மீது யாழ்ப்பாணத்தில் முப்பத்தாறு ரூபா ஐம்பது சதம் விற்ற மேசனறி சிமெந்தை அதே விலையில் கொழுபுக்குக் கொண்டுசென்று விற்றதாக குற்றம் சாட்டி வேலையில் இருந்தும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். இதே நேரத்தில் சங்கத்தின் பொதுமுகாமையாளர் மீதும் இச் சிமெந்து விற்பனை பற்றிய மோசடி சம்பந்தமாக இயக்குனர் சபையினால் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

விற்பனை வானில்

பணம், காசோலை திருடியவர் கைது!

(மன்னார்)

சாய்ப்புச்சாமான் விற்பனை செய்வதற்காக கொழும்பிலிருந்து தலைமன்னாருக்கு வந்த விற்பனை வானில் 9600 ரூபா பணத்தையும். காசோலைப் புத்தகத்தையும் திருடியவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் தமது வானில் இருந்து பணத்தையும், காசோலையையும் திருடியதாக நாவலப்பிட்டியைச் சேர்ந்த எம். வகாப்டீன் என்பவர் பொலிசில் புகார் செய்திருந்தார்.

இப்புகாரில் கூறப்பட்டுள்ளதாவது;

சாய்ப்புச் சாமான் விற்பனைக்காக விற்பனைவானில் மூவர் தலைமன்னாருக்கு வந்து விற்பனையில் ஈடுபட்டபோது விற்பனை வான் மணலில் புதைந்து விட்டது.

மணலில் புதைந்த விற்பனை வானை வீதிக்குக் கொண்டுவர மூவர் உதவிசெய்தனர். அப்போது விற்பனை வானின் பின் பக்கத்தில்ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார். விற்பனைவானை வீதிக்குக் கொண்டுவந்தபின் விற்பனை வானில்வந்த மூவரும் கடைக்குச் சென்றுவிட்டு திரும்பி வந்து வானைப் பார்த்தபோது விற்பனைவானுள் வைத்திருந்த காசுப்பை திருடப்பட்டிருந்தது.

இத்திருட்டுச் சம்பவம்பற்றி தலைமன்னார் பொலிசில் புகார் செய்யப்பட்டது

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட தலைமன்னார் பொலிசார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து 5 ஆயிரம் ரூபா பணத்தையும், காசோலைப் புத்தகத்தையும் கைப்பற்றினர்.

இச்சம்பவம் தொடர்பாக தொடர்ந்தும் விசாரணை நடைபெற்று வருகிறது.

அனலைதீவு வடக்கில் நடந்த

நள்ளிரவுகொள்ளை தொடர்பாக நான்கு பேர் கைது

ஒருபகுதி நகைமீட்பு, மேலும் ஒருவர் தேடப்படுகிறார்

[ஊர்காவற்றுறை நிருபர் ஞா. அந்தோனிசாமி]

நள்ளிரவில் வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களைப் பயமுறுத்தி பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அனலைதீவு வடக்கில் நடைபெற்றுள்ள இச்சம்பவம் தொடர்பாக நான்குபேரை ஊர்காவற்றுறைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருபகுதி நகையும் மீட்கப்பட்டுள்ளது.

அனலைதீவில் வடக்கே கந்தசுவாமி தவமணிதேவி என்பவரின் வீட்டில் நள்ளிரவில் புகுந்த திருடர்கள் வீட்டில் உள்ளோரைப் பயமுறுத்தி ரூபா 62,080/- பெறுமதியான தங்கநகைகளை கொள்ளையடித்துச் சென்றனர். கந்தசாமி தவமணிதேவி ஊர்காவற்றுறைப் பொலிசில் செய்த முறைப்பாட்டினை தொடர்ந்து ஊர்காவற்றுறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஞானப்பிரகாசம் பொலிஸ் சார்ஜண்ட் திரு. எஸ். பரமேஸ்வரன் ஆகியோரின் தலைமையில் அனலைதீவு சென்ற பொலிஸ் கோஷ்டியினர் சந்தேகத்தின் பேரில், கந்தசாமி செல்வநாயகம், சாம்பசிவம் யோகராசா, சிவசம்பு குமாரகுரு, நடராசா இந்திரபாலன் ஆகியோரை கைது செய்து விசாரணை செய்ததன் பேரில் ரூபா 52,000/- பெறுமதியான நகைகள் கைப்பற்றப்பட்டன.

இக்கொள்ளையில் ஈடுபட்டவரெனக் கருதப்படும் இன்னுமொரு சந்தேகநபரை பொலிசார் தீவிரமாகத் தேடுகின்றனர். கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரி.கே.என். திலகனை முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை 7-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படியும் அன்றுஅடையாள அணிவகுப்பு நீதிமன்றத்தில் நடைபெறுமெனவும் நீதிபதி உத்தரவிட்டார். பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணை செய்கின்றனர்.

சிறிமாவின் மன்னார், வவனியாவிஜயம்ஒத்திவைப்பு

[வவனியா]

சிறீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி. பண்டாரநாயக்காவின் வவனியா, மன்னார் விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க இம்மாதம் 18ம் திகதி இவ்விரு பகுதிகளுக்கும் விஜயம் செய்யவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் சிறிமா எந்தவொரு கூட்டத்திலும் பங்குபற்றுவதை தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

இதன் காரணமாக இவரது வவனியா விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சிறிமா பிரிவினர் வவனியாவில் ஜனாதிபதி தேர்தலில் தமது அபேட்சகருக்கு ஆதரவு தேடும் வகையில் பகிரங்கக் கூட்டமொன்றை நடத்த தீர்மானித்துள்ளார்.

வன்னி தேர்தல் தொகுதி பிரதம அமைப்பாளர் திரு மு. நடராசா இங்கு சுதந்திரக் கட்சி சிறிமா பிரிவின் பிரசார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

மீன்வாடியில் தகராறு: ஒருவர் அடித்துக் கொலை?

[வவனியா]

மீன்வாடியில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்டு கடலில் வீசப்பட்டாரா? சடலத்தை பொலிசார் தேடிவருகின்றனர்.

இச்சம்பவம் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவில் உள்ள செம்மலை என்னும் இடத்தில் நடந்துள்ளது.

பெர்ணாண்டோ என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது. சம்பவதினம்இறந்தவரை செம்மலை மீன்வாடியில் வைத்து யோசப்பு மார்க்குஸ் என்பவர் அடித்ததாக இறந்தவரின் மனைவி பினித்தா பிரூசி பெர்ணாண்டோ முல்லைத்தீவு பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

இறந்தவரை மார்க்குஸ் பலபலமாக தாக்கியபோது அவர் தாக்குப்பிடிக்க முடியாமல் கடற்கரை பக்கம் ஓடியதாகவும் மனைவி பொலிசில் புகாரில் தெரிவித்துள்ளார்.

கடற்கரைப்பக்கமாக ஓடியவர் வீடு திரும்பாததினால் பெர்ணாண்டோ கொலை செய்யப்பட்டு கடலில் சடலம் எறியப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் பொலிசாருக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

உடைந்தகண்ணாடித்துண்டில் எம். ஜி. ஆரின் உருவம்!

[புலோலி]

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் உருவமொன்றை ஈழத்துக்கலைஞரான திரு. எஸ். சுந்தரலிங்கம் [ஈழத்தீபன்] உடைந்த போத்தல்களின் வண்ணக்கண்ணாடித் துண்டுகளைப் பயன்படுத்தி உருவாக்கியுள்ளார்.

தமிழ்நாடு செல்லவுள்ள ஈழத்தீபன் இவ் உருவத்தை தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனிடம் நேரில் கையளிக்கவுள்ளார். தலைசிறந்த ஓவியரான இவர் வனைதல் தொழிலில் தேர்ச்சி பெற்றுள்ளதுடன் சித்திரங்கள் தீட்டுவதிலும் வல்லவராவார். தற்போது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தற்காலிக தொழில்முன்னிலைப் பாட ஆசிரியராகக் கடமையாற்றிவருகின்றார்.

'பனம் பொருட்கலைஞர்' என்ற பாராட்டையும் பெற்றுள்ள ஈழத்தீபன் பனம் பொருட்களைக்கொண்டு அருமையான கலைப் பொருட்களையும் பொம்மைகள் விளையாட்டுப் பொருட்கள் என்பனவற்றைத் தயாரிப்பதிலும் கைதேர்ந்தவர்.

சமாதான நீதவானாக நியமனம்

(மட்டுவில்)

நீதிமன்ற முதலியாராக கடமையாற்றிய திரு. கே. வி. பி. வேலாயுதபிள்ளையை நீதி அமைச்சு யாழ்மாவட்ட சமாதானநீதவானாக நியமித்துள்ளது. திரு. வேலாயுதபிள்ளை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனாப் எம். எச். காரியப்பர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த திரு கே. வி. பி. வேலாயுதபிள்ளை கடந்த 23 ஆண்டுகாலமாக நீதித் துறையில் கடமையாற்றி வந்தவர்

அபிவிருத்தி நிதியை

பயன்படுத்துவது பற்றி கிராமோதய சபை தீர்மானம்

[புலோலி]

கிராமோதய சபைகள் அவ்வப் பகுதியில் மேற்கொள்ளவிருக்கும் அபிவிருத்திக்கென வழங்கப்படவுள்ள ஒரு லட்சம் ரூபாவை எவ்வெவ்அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவதென கெருடாவில் கிராமோதய சபை தீர்மானித்துள்ளது.

இதுசம்பந்தமான கூட்டம் கிராமோதய சபைத் தலைவர் திரு. பொ. சுந்தரலிங்கம் தலைமையில் கெருடாவில் சைவவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கெருடாவில் வடக்கு சுடலை வீதி திருத்தப்பட்டு புதிய வீதியமைப்பதற்கு 40,000 ரூபா ஒதுக்குவதென்றும், கெருடாவில் தெற்கு மூன்றும் சந்தியில் மழைகாலங்களில் வெள்ளம் தங்கிநின்று மக்களுக்கு இடைஞ்சல் விளைவிப்பதனால் அவ்விடத்தைத் திருத்த20,000 ரூபா ஒதுக்குவதென்றும் பனம் பொருள் பயிற்சி நிலையமொன்றையமைப்பதற்கு 25,000 ரூபா ஒதுக்குவதென்றும் மாதர் சங்கக் கட்டிடமொன்றையமைப்பதற்கு 15,000 ரூபா ஒதுக்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஐ. தே. க. அமைப்பாளர் ஜனாதிபதி சந்திப்பு

[வவுனியா]

வன்னித்தேர்தல் தொகுதி ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர்களுக்கும் ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இடையே சந்திப்பொன்று நாளை இடம் பெறவுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறும் இச் சந்திப்பில் வன்னித்தொகுதி மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ள இருப்

[7ம் பக்கம் பார்க்க]

தெ. ப. பொ. உ. வி. சங்கங்கள்

சமூக,பொருளாதார அபிவிருத்தி கருதி செயற்படவேண்டும்

[புலோலி]

'எமது சமூக மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தி மேம்பாடுகள் கருதியே தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன இதனைக் கருத்திற்கொண்டு இச்சங்கங்களின் சகல தலைவர்களும் சிறப்பாகச் செயற்படும்போது எங்கள் மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திகள் நிச்சயம் மேம்படுத்தப்படும்.

இவ்வாறு பருத்தித்துறை புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கே. சிவப்பிரகாசம் சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழாவிற்கும், புதிய கட்டடத் திறப்பு விழாவிற்கும் தலைமைவகித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்,

உடுப்பிட்டி எம். பி திரு. த. இராசலிங்கம் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. சிவப்பிரகாசம் கூறியதாவது:-

'இச்சங்கத்தின் இப்போதைய நிர்வாக சபை பதவிக்கு வந்து மிகக்குறுகிய காலத்திற்குள் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்வாக சபையினரும் அங்கத்தவர்களும் ஊழியர்களும் ஒன்றுபட்டுச் சிறப்பாக இயங்கியமையே காரணமாகும். சங்கத்தின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளுக்கும் கூட்டுறவு இலாகா, பொலிசார், கலால் பகுதியினர் வேண்டிய உதவிகளை வழங்கியமை பாராட்டப்படவேண்டியதாகும்

'தொழிலாளர்களின் குறைபாடுகளைப் போக்கித் தேவைகளைப் பூர்த்திசெய்து சங்கத்தின் வளர்ச்சியை மேம்படுத்துவதே எனது இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டுவருகிறேன். எனது சமூகத்திற்கும், அவர்களது பொருளாதார உயர்ச்சிக்கும் என்னால் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றார்.

★ மயிலிட்டி கோரக்கொலை:

சந்தேகநபர்களுக்கு 13வரை றிமாண்ட்

[மாவிட்டபுரம்]

மயிலிட்டி கோரக் கொலை குறித்து கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் இம்மாதம் 13ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

மயிலிட்டியைச் சேர்ந்த சீனியர் துரைசாமி [44 வயது] என்பவர் மயிலிட்டி-கட்டுவன் வீதியில் வைத்து கோரமாக வெட்டப்பட்டும், தாக்கப்பட்டும் கொலையுண்டது தொடர்பாக காங்கேசன்துறைப்பொலிசார் சந்தேக நபர்களைத்தேடி வந்தனர்.

சந்தேகநபர்களில்ஒருவரான கந்தையா பாலசிங்கம்என்பவர் மேற்படி சம்பவத்தின் போது கையில் கத்தி வெட்டுக்கிலக்காகி மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அங்கிருந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவந்ததுதெரிய வரவே காங்கேசன்துறைப் பொலிசார் அங்குசென்று அவரைக் கைதுசெய்தனர்.

மற்றைய நபரான இளையகுட்டி கதிரமலை என்பவரை தெல்லிப்பளையிலுள்ள அவரது வீட்டில் வைத்துக் கைதுசெய்தனர். இவரது வீட்டின் முன்புறமாக மணற்கும்பியினுள் புதைக்கப்பட்டிருந்த கொலைக்குப் பாவிக்கப்பட்ட கத்தியையும் கிழிந்த சேட் ஒன்றையும், இரத்தக்கறைபடிந்த துணிகளையும் பொலிசார்மீட்டனர்.

மேற்படி இரு நபர்களையும் காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்தபோது இம்மாதம் 13-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி திரு. சீ. வி விக்னேஸ்வரன் உத்தரவிட்டார்.

வசதிக்கட்டண ஆசிரியர்: நிரந்தரநியமனம்கிடைக்குமா

(வவனியா]

வசதிக்கட்டண ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

வன்னி மாவட்டத்தில் 300 க்கு மேற்பட்டவர்கள் இப்படிபட்ட ஆசிரியர்களாக பணிபுரிகின்றனர்.

ஒரு வருடத்துக்கு மேலாக பணிபுரியும் இந்த ஆசிரியர்களின் நிலையை அரசு அறிந்தும் நிரந்தர நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் இந்த வேளையில் ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா இவ்விடயத்தினை தனது நேரடிக்கவனத்துக்கு எடுத்துக்கொள்வார் என தாம் எதிர்பார்ப்பதாக வசதிகட்டண ஆசிரியர் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆசிரியர்களுக்கு ஒரு விமோசனத்தை ஏற்படுத்த இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக இவர் தெரிவித்தார்.

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6–15, 9–30
சனி, ஞாயிறு 2–30
கமலஹாசன்
உல்லாசப்பறவைகள்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

மசகு

(3–ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தயோசனையை ஏனைய ஒபெக் நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

மசகு எண்ணெயில் தரம் வாய்ந்ததாகக் கருதப்படும் ஆபிரிக்க மசகு எண்ணெயின் விலை ஒரு பீப்பா 37·8 டாலர்களாக இருந்து வருகின்றது.

சவூதி அரேபியாவின் புதிய விலையேற்ற யோசனை எதிர்வரும் ஒபெக் நாடுகளின் சந்திப்பின்போது அமுலாக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

[கி]

கல்லாக்காரம் இறக்குமதி செய்யப்படமாட்டாது

பனம் பொ அ. ச. தலைவர் கூறுகிறார்

(மட்டுவில்)

"கடந்த பல்லாண்டு காலமாக இறக்குமதி செய்யப்பட்டு வந்த பனம்கற்கண்டு 'கல்லாக்காரம்' இனிமேல் எக்காரணம் கொண்டும் இறக்குமதி செய்யப்படமாட்டாது. இலங்கையின் சுயதேவையைப் பூர்த்தி செய்யும்வகையில் பனம் பொருள் அபிவிருத்தி சபை அதை உற்பத்தி செய்கிறது"

இவ்வாறு பனம்பொருள்அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. கே. நடராஜா பனம்பொருள் அபிவிருத்திசபையின்உற்பத்திகளைப் பார்வையிட்ட சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனுப் எம். எச் காரியப்பருக்கு பனம் கல்லாக்காரம் பற்றி விளக்குகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றிக் கூறுகையில் தெரிவித்ததாவது

"பல்லாயிரம் ஆண்டுகளாக பனம்கற்கண்டு அல்லது கல்லாக்காரம் என்று கூறப்படும் இப்பொருள் சித்தஆயுர்வேத வைத்தியத்துறையில் ஒரு முக்கிய அம்சமாக விளங்கியது. கல்லாக்காரம் கடந்த பல நூற்றாண்டுகளாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது.

"தற்போது பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் முயற்சியால் பனம்பொருள் அபிவிருத்தி சபையின் பனம்பொருள் உற்பத்திகள் நவீனமயமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக பனம் கல்லாக்காரம் உற்பத்தியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இது இலங்கையைப் பொறுத்தளவில் ஒரு புதிய சரித்திரத்தையே உருவாக்கிவிட்டுள்ளது" என்றார்.

மடத்தில் வாழ்ந்த வயோதிபர் கிணற்றுள்விழுந்துதற்கொலை

[புலோலி]

ஆலய மடத்தில் வாழ்ந்து வந்த வயோதிபரொருவர் கிணற்றுள்விழுந்து தற்கொலை செய்துகொண்டாராம்.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயமடத்தில் வாழ்ந்துவந்த அளவெட்டியைச் சேர்ந்த செல்லத்துரை [வயது 80] என்பவரே கிணற்றுள் விழுந்து தற்கொலைசெய்து கொண்டவராவர்.

இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளைத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. தி. வேலுப்பிள்ளைமேற்கொண்டார். வல்வெட்டித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் துரை சிங்கம் சாட்சிகளை ஆஜர்செய்தார்.

தொண்டமானாறு காளிப் பிள்ளை மடக்கிணற்றைச் சுத்தம் செய்யச் சென்றபோது அதற்குள் சடலமொன்று காணப்பட்டதாகவும் இது சம்பந்தமாக தங்கராசா ஐயர் தகவல் கொடுத்ததாகவும், பின்னர் இறந்தவர் அளவெட்டியைச் சேர்ந்த சின்னத்துரை என்பவரே என்று காணப்பட்டு அவரது மகளுக்குத் தகவல் கொடுத்ததாகவும் மகள் சடலத்தைப் பொறுப்பேற்க வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்து சடலத்தை கிராம சேவை அலுவலர் திரு. தேவராசாவின் கண்காணிப்பில் அரசசெலவில் அடக்கம் செய்யுமாறு உத்தரவிட்டார்.

ஆலயம்சென்ற சிறுவன் ஆற்றுக்குப் பலி

(புலோலி)

சகோதரனுடன் ஆலயத்திற்குச் சென்ற பதின்மூன்று வயதுச் சிறுவனொருவன் ஆற்றில் குளிக்கும்போது ஆற்றுக்குப் பலியானார்.

தொண்டமானாறு பெரிய கடற்கரையைச் சேர்ந்த மகேந்திரன் நாகசெல்வம் என்ற சிறுவனே ஆற்றுக்குப் பலியானவராவர். இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி மேற்கொண்டார். வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் சேய்தனர்.

இறந்த சிறுவனின் பேத்தியாரான சிவகுரு மாரிமுத்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"இறந்தவர் எனது பேரன், இவரின் பெற்றோர்கள் இவ்விடமில்லை. இறந்தவரும் அவரது சகோதரனும் என்னுடனேயே வசித்து வருகின்றார்கள். இறந்தவருக்கு அடிக்கடி வலி வருவது வழக்கம்.

"சம்பவ தினம் காலை 7 மணிபோல் இருவரும் சந்நிதி முருகன் கோவிலுக்குப் போவதாகக் கூறிப் போனார்கள். பின்னர் சுமார் 11 மணிபோல் இறந்தவரின் தம்பி மணிசெல்வம் வந்து "அண்ணா ஆற்றுக்குள் செத்துவிட்டார்" என்று கூறினார் உடனடியாக அவ்விடத்துக்குச் சென்றோம். அவர் ஆற்றுக்குவெளியேஇறந்தபடி கிடத்தப்பட்டிருந்தார்.

"இறந்தவரின் சகோதரன் மணிசெல்வம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"இறந்த அண்ணா ஆற்றில் குளிக்கப்போவதாகச் சொன்னார். சுகமில்லாத நீ ஆற்றில் குளிக்கவேண்டாமென்று சொன்னேன். பின்பு நான் கோவில் முன்பக்கத்திற்கு போய்விட்டேன் பின்பு அவ்விடத்திற்கு திரும்பிவரும்போது அண்ணாவை ஒருவர் தோளில் தூக்கிக்கொண்டுவந்தார். அவர் அண்ணா ஆற்றில் குளிக்கும்போது மூழ்கியதாகவும், தான் மீட்டுவருவதாகவும் சொன்னார். அவர் இறந்துவிட்டார். நான் வீட்டிற்கு ஓடிச்சென்று சம்பவத்தைச் சொன்னேன்.

மரண விசாரணை அதிகாரி நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (வெ)

பொருட் காட்சியில் மனித உடல்!

(மட்டுவில்)

மருத்துவம் சம்பந்தமான பொருட்காட்சியில், மனிதவுடல் உறுப்புகளின் விளக்கங்களை மக்களுக்கு முழுமையாகக் கொடுக்கும் முகமாக லயன்ஸ்கழக டாக்டர்கள் முழுவுடலுறுப்புக்களையும் கொண்ட ஒரு ஆண் பிரேதத்தை அழைப்பித்துள்ளனர்.

இபபொழுது சாவகச்சேரியில் நடைபெறும் லயன்ஸ் கழகத்தாரின் பெருட்காட்சி, களியாட்ட விழாவில் இந்தப் பிரேதம் பிரத்தியேகமாகப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இதைத் தினசரி பெருந்திரளான மக்கள் சென்று பார்த்து அவர்கள் அளிகும் விளக்கத்தையும் கேட்டு அறிந்து கொண்டு செல்கின்றனர்.

றீகல் Daily 5 Shows
[யாழ்.நகர்]
BETSY
Sexy Film

சாந்தி [யாழ்.நகர்]
தினசரி 5 காட்சிகள்
MARTIN SHEEN
SAM WATERSTON
'Eagles Wing'
(Scope — Color)

123 வது வெற்றித் திருநாளாக
மனோகரா (யாழ்ப்பாணம்) 8-9-82 வரை
தினசரி 10–30, 2–30, 6–30, 9–30
கார்த்திக் - ராதா - தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
ரவிச்சந்திரன் – விஜயா
நினைவில் நின்றவள்

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

ராணி (யாழ் நகர்) 9வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

3-வது வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
ஐந்து இளைஞர்களும், ஐவகை ஆயினும் ஆருயிர் நண்பர்கள் ஒவ்வொருவருடைய தனி வாழ்க்கையும் ஒருவகைப் பாலைவனம். இவர்களின் வாழ்வில் அழகும் இனிமையும் எளிமையும், தூய்மையும் பரந்தநோக்கமுடைய பெண்ணொருத்தி வருகிறாள். ஐவருக்கும் அவளில் ஒரு கண். அவளோ ஐவரிலும் ஒரு வகையான அன்பையே வைத்திருந்தாள். முடிவை அறியவெண்திரை விடையளிக்கும்.
பாலைவனச்சோலை
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
பிரதாப் - ராதிகா
டெல்லி கணேஷ்
விஸ்வநாத் நடிக்கும்
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

நாடகப் போட்டியில் தங்க, வெள்ளி பதக்கங்களைப் பெற்றனர்

(மட்டுவில்

தென் மட்டுவிலூர் வளர்மதி சனசமூகநிலையம் நடத்திய மாபெரும் நாடகவிழாவில் கலந்துகொண்டு முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற நாடகங்களுக்கு தங்க, வெள்ளிப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

வளர்மதி சனசமூகநிலையம் தனது 17வது ஆண்டு பூர்த்தி விழாவையொட்டி இந்த நாடகவிழாவை வடமாகாண ரீதியில் நடத்தியது. இதில் சாவகச்சேரி பெரியமாவடி சித்திவிநாயகர் சனசமூகநிலையத்தாரின் 'ஏன் இந்த மாற்றம்' தங்கப்பதக்கத்தையும் யாழ். நவயுக நாடக மன்றத்தாரின் 'சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்' வெள்ளிப்பதக்கத்தையும், வட மயிலையூர் இலங்கேஸ்வரன் நாடகமன்றத்தாரின் 'ஜூலியஸ்சீசர்' மூன்றும் இடத்தையும் பெற்றன.

இதற்கான தங்க, வெள்ளிப் பதக்கங்களை டாக்டர் பே. பிலிப்பும் ஏனைய பரிசில்களை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் வழங்கியுள்ளனர்.

செல்வ

(3ம் பக்கத் தொடர்ச்சி]

ளனர்.

கனடாவில் ரொரன்டோ நகரில் ஆரம்பமாகவுள்ள 140 நாடுகளின் நிதியமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர்கள் பொருளியல் நிபுணர்களின் மகாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே செல்வந்த நாடுகள் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

உலகவங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியன ஒழுங்கு செய்துள்ள இம்மகாநாட்டில் வறிய நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார கொடுக்கல்வாங்கல்பற்றி ஆராயப்படும்.

இந்த மகாநாட்டில் உலக வங்கி, வறிய நாடுகளுக்கு வழங்கும் கடனுதவியை பரவலாக்கி அதிகரிக்கவேண்டுமென்று இந்திய நிதியமைச்சர் கேட்டுக் கொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது உலக நாடுகளில் பிரதிநிதிகளும் கைத்தொழில் நாடுகளின் பிரதிநிதிகளும் இம்மகாநாட்டுக்கு முன்னோடியாக ஏற்கனவே தனித்தனியே சந்தித்து ஆலோசனைகளைப் பரிமாறினர் என்று தெரிவிக்கப்பட்டது.

[கி]

ஐ. தே. க.

(6ம் பக்கத் தொடர்ச்சி]

தாக வவுனியா மாவட்ட அபிவிருத்தி சபை ஐ. தே. கட்சி உறுப்பினர் டாக்டர் வி. பரராஜசிங்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் ஐ தே கட்சி தமது அபேட்சகருக்கு ஆதரவு தேடும் வகையில் வன்னிதொகுதியில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் பற்றி இச் சந்திப்பின் போது பிரஸ்தாபிக்கப்படலாம் எனத் தெரிய வருகிறது.

★ சிறு மீன்பிடியாளர்கள் பிரச்னை எதிரொலி:

உண்ணாவிரதமிருக்க என்வீடு உகந்ததல்ல!

பருத்தித்துறை எம். பி. பதிலளிக்கிறார்

"அமைச்சு அலுவலகம் முன்பாக என்றால் நானும் கலந்துகொள்கின்றேன்"

[புலோலி]

பருத்தித்துறைப் பகுதியில் இழுவைப்படகுகளினால் பாதிக்கப்பட்டு வரும் சிறுமீன்பிடியாளர்களின் பாதிப்பை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு மீன்பிடி அமைச்சின் அலுவலகத்தின் முன் உண்ணாவிரதமிருக்க வேண்டுமே தவிர எனது வீட்டின்முன் உண்ணாவிரதமிருப்பதனால் எதுவித பயனுமில்லை, மீன்பிடி அமைச்சின் அலுவலகத்தின் முன்உண்ணாவிரதமிருக்க நானும் ஆயுத்தமாக இருக்கிறேன். என்று பருத்தித்துறை எம். பி. சிரு. கே துரைரத்தினம் பருத்தித்துறை நகர கிராமோதயசபைத்தலைவர் திரு. மு. பொ. வீரவாகுவுக்கு அனுப்பிவைத்துள்ள தந்தியில் குறிப்பிட்டுள்ளார்,

இழுவைப்படகுகளினால் பாதிப்படைந்து வரும் சிறு மீன்பிடியாளர்களின் பல ஆயிரக்கணக்கான மீன்பிடிவலைகள் சேதப்படுத்தப்பட்டுவருவதாகவும் இச்சிறு மீன்பிடியாளர்களின் பாதிப்பை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால்பருத்தித்துறை எம். பி திரு கே, துரைரத்தினம் வீட்டின் முன் சிறு மீன்பிடியாளர்களும், தாங்களும் உண்ணாவிரதமிருக்கப்போவதாக கிராமோதய சபைத்தலைவர் திரு மு. பொ வீரவாகு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத்தலைவர் திரு. எஸ், எம் சந்தசாமிக்கு தந்தி மூலம் அறிவித்திருந்தனர்.

இவ் உண்ணாவிரதத்தந்தியைத் தொடர்ந்து பருத்தித்துறை எம். பி திரு. துரைரத்தினமும் கிராமோதய சபைதலைவர் திரு. வீரவாகுவுக்குத் தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார். எம். பி. யால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

"இழுவைப் படகுகளினால் சிறு மீன்பிடியாளர்கள் கஷ்டம் அனுபவித்துவருகின்றார்கள். இது இப்பகுதியில் மட்டுமல்ல பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றுவருகின்றது. இந்த நிலையில் சிறு மீன்பிடியாளர்களின் இப்பாதிப்பு நீக்கப்படவேண்டியதுமிக முக்கியமானதாகும். மீனவர்களின் பிரச்னைகள்பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உப குழுவிலே சிறு மீன்பிடியாளர்களின் இப்பிரச்னை உட்படப் பல பிரச்னைகள் பற்றி நான் பிரஸ்தாபித்தேன். பாராளுமன்ற உப குழு தனது சிபார்சை வழங்கி வருந்தது ஆனால் அவை இதுவரை வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்படவில்லை. எனவே இப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கு எனதுவீட்டின் முன்பாக உண்ணாவிரதம் இருப்பதால் எதுவிதபயனுமில்லை. கௌரவ மீன்பிடி அமைச்சின் அலுவலகத்தின் முன்னால்தான் உண்ணாவிரதமிருக்கவேண்டும். அங்கு உண்ணாவிரதம்மேற்கொள்ளப்படுமானால் நானும் வந்து பங்கு கொள்வேன். ஆனால் எனது வீட்டின் முன்புதான் இருக்க வேண்டுமென்று கருதினால் அது உண்ணாவிரதமா? சத்தியாக்கிரகமா? என்று அறிவித்தால் நான் அதற்கான ஒழுங்குகளைச் செய்து உதவத் தயாராகவுள்ளேன்.''

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபை, இழுவைப்படகுகளினால் பாதிக்கப்படும் சிறு மீன்பிடியாளர்களின் பிரச்னை சம்பந்தமாக சிறுமீன்பிடியாளர்களை அழைத்து மகாநாடொன்றை பருத்தித்துறைஉதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடாத்தப்படவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளரும் உதவி அரசாங்க அதிபருமான திரு. வை. வேலும்மயிலும் அறிவித்துள்ளார்.

சிரமதானம்

[மன்னார்]

தலைமன்னார் அரசினர் வைத்திய சாலைச் சுற்றுடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதான மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

தலைமன்னார் கிராமோதய சபைத் தலைவர் திரு. அல்பிரட் சில்வா தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானப் பணியில் பலர் கலந்து கொண்டனர்.

சுவாமி சிவானந்தர் ஜயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி சிவானந்தரின் ஜயந்தி விழா நாளை புதன் கிழமை திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

காலை அகண்டநாம பஜனையும், மாலை பூஜை, பஜனையும் நடைபெறவுள்ளன 'ஆத்ம ஜோதி' ஆசிரியர் திரு, நா. முத்தையா, 'அருள்மொழி அரசி' திருமதி வசந்தா வைத்தியநாதன், நல்லை ஆதீனம் சோமசுந்தர பரமாசாரியசுவாமிகள் அருளுரைநிகழ்த்துவர். (மா)

தபால்மூலம் வாக்களிப்பு: கருத்தரங்குமூலம் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

வடமாகாணப் பகுதியில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கும் உரிமை பெற்றோருக்கான செயல்முறை விளக்கக் கருத்தரங்கு நேற்றுக்காலை யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வடமாகாணத்திலுள்ள அரசாங்கத் திணைக்கள – கூட்டுத்தாபன தலைவர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

வடபகுதி உதவி தேர்தல் ஆணையாளர் திரு. அ. ஜெயரத்தினம், தபால்மூலம் வாக்களிக்கும் பத்திரங்களை எவ்விதம் நிரப்பி அனுப்பவேண்டும் என்று செயல்முறையில் விளக்கம் அளித்தார்.

தபால்மூலம்வாக்களிப்போர் அதற்கான விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதற்கான கடைசிநாள் நாளை மறுதினம் வியாழக்கிழமை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வல்லை முக்கொலை வழக்கு: 11-ம்எதிரிபிணையில்அனுமதி

(புலோலி)

வல்லை முக்கொலைச்சம்பவ 11-ம் எதிரி மேல் நீதிமன்ற உத்தரவின்பேரில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி பி சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்

கம்பர்மலை பயங்கரதுப்பாக்கிச்சூட்டு அறுவர் கொலைச்சம்பவ எதிரிகள் அறுவர் விசாரணைக்காகயாழ்.சிறைச்சாலையிலிருந்து பருததித்துறை நீதிமன்றத்திற்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் இ. போ. ச. பஸ்வண்டியில் அழைத்து வரப்பட்டபோது உப்புவல்லையில் வைத்து பஸ் வழிமறிக்கப்பட்டு மூன்று சிறைக்கைதிகளை துப்பாக்கியால் சுட்டும், வாளால்வெட்டியும் கொலை செய்ததாகவே இவ் எதிரிகள் மீது குற்றஞ்சாட்டி வல்வெட்டித்துறைப் பொலிசார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல செய்திருந்தனர்.

இம் முக்கொலை வழக்கின் 11ம எதிரியான விவேகானந்தனைப் பிணையில் விடுமாறு கோரி மேல்நீதிமன்றத்தில் பிணைமனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. இப்பிணை மனு மீதான விசாரணையை மேற்கொண்ட மேல்நீதிமன்ற நீதிபதி 5,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிவழங்கியதுடன் எதிரி ஒட்டுசுட்டான் பொலிஸ்பகுதியை விடவேறு எப்பகுதிக்கும் செல்லக்கூடாதென்றும் முக்கியமாக 'வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதிக்குச்சென்று இக்கொலை வழக்கின் சாட்சிகளுக்கு இடைஞ்சல்விளைவிக்கக்கூடாதென்றும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் கைச்சாத்திட வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

மேல்நீதிமன்ற உத்தரவிற்கிணங்க எதிரியான விவேகானந்தன் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டார்.

விவசாயக்கழக பொருட்காட்சி

(புலோலி)

யாழ். மாவட்ட இளைஞர் விவசாயக்கழகங்களின் வருடாந்த விழாவும்பொருட்காட்சியும் இம்மாதம் 25ம் திகதி திருநெல்வேலி அரசினர் விவசாயப்பாடசாலையில் நடைபெறவுளது. இதற்கான நடவடிக்கைகளை யாழ். விவசாய உதவிப்பணிப்பாளர் திரு.எஸ். ஜெயரத்தினம்மேற்கொண்டுள்ளார்.

இப்படியும் நடக்கிறது

தாய்லாந்து பெருமளவில் அரிசி உற்பத்தி செய்யும் நாடு.

உலகில் அரிசி ஏற்றுமதி நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தை தாய்லாந்துதான் வகிக்கிறது. அரிசி தவிர, பல வகைப்பழங்கள், காய்கறி வகைகள், கடல் உணவு, பன்றி, கோழி இறைச்சி ஏற்றுமதியிலும் தாய்லாந்து முக்கிய இடம் வகிக்கிறது.

இவ்வளவு 'செல்வம்' இருந்தும் என்ன பயன்?

தாய்லாந்துக் குழந்தைகளில் அரைவாசித் தொகையினர் போஷாக்கின்மை அதாவது சத்துணவே இல்லாமல் இப்பொழுது செத்துக்கொண்டிருக்கின்றனர்!

'ஊடுகதிர்'

திருவுருவச்சிலை

(மன்னார்)

பேசாலை சென், அன்ரனி வீதிச்சந்தியில் இம்மாத இறுதியில் புனித அந்தோனியார் திருவுருவச்சிலை யொன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இத் திருவுருவச் சிலையை பேசாலை வில்வராயார் வழங்குவார்.

புதிய வெளிநோயாளர் குதி

[மன்னார்]

முருங்கள் அரசினர் வைத்திய சாலையில் சுமார் மூன்று லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட வெளிநோயாளர் பகுதியை முருங்கன் வட்டார வைத்திய அதிகாரி திரு. முகுந்தன் திறந்து வைத்தார்.

நிலக்கரி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி வேலைகள் தரிதமாக நடத்துகிறது என்றும், இறக்குமதி வேலைகளுக்குப் பொறுப்பதிகாரியாக சிரேஷ்ட சுப்பிரிண்டன் திரு. ரி துரைராஜா கடமையாற்றுகின்றார் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கப்படுகிறது.

ஆனாலும்; சிறிமா அணிசார்பில் திரு ஹெக்டர் கொம்பேக்கடுவ போட்டியிடத் தேர்ந்தெடுக்கப்பட்டால், திரு. மைத்திரிபால சேனநாயக்கா தமது யோசனையை மறு பரிசீலனை செய்யலாம் என்று அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

யாழ்.சிறைச்சாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞனின் தாயும் தந்தையும் குருநாகல் சிறைச்சாலையில் ஊழியர்களாகக் கடமையாற்றியிருக்கிறார்கள். அப்படியிருந்தும், இவரை நற்பண்புள்ளவராக வளர்பபதில் அக்கறை செலுத்தவில்லை. இனிமேல் எந்தவிதமான குற்றச் சம்பவங்களிலும் ஈடுபடமாட்டேன் என்று இவர் உறுதியளித்ததைத் தொடர்ந்துதான், நான் இத்திருமணத்தைச் செய்து வைக்க முடிவுசெய்தேன்.

எத்தனையோ சிறைக்கைதிகள் விடுதலைபெற்றதும்திருத்தமடைந்து, தமது குடும்பத்துக்கும், சமூகத்துக்கும். நாட்டுக்கும் அரிய பல தொண்டுகள் செய்துவருகிறார்கள். இவருக்கும் சலுகை உண்டு; இதைப் பயன்படுத்தவேண்டும்'' என்றார். [மா]

சௌக்கிய சேவை பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அக்டோபர் 6-ம் திகதி யாழ், வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. எஸ் சீவரத்தினம் தலைமையில் நடைபெற விருக்கும் இக்கூட்டத்தில் கூட்டுறவு, சுகாதார, மக்கள் வங்கிப் பகுதிகளைச் சேர்ந்த பிரமுகர்கள் சொற்பொழிவாற்றுவர்.

சகாயநிதிப் பணம்

இச்சங்கம் செட்டி குளம் அரசினர் வைத்தியசாலையில் ஆண்பரிசோதகராகக் கடமையாற்றி மரணமான பரிசாரகர் நல்லதம்பி அமிர்தநாதருக்கு மரணசகாய நிதியாக 2787 ரூபாவும் சேமிப்புப் பணமாக 1248 ரூபா 22 சதமும் வழங்கியுள்ளது. இச்சகாயப் பணத்தை திருமதி பர்வதம் அமிர்தநாதருக்கு யாழ். சௌக்கிய சேவை சங்கக்காரியாலயத்தில் வைத்து, செயலாளர் திரு. எஸ்.செல்லத்துரை வழங்கினர். [மா]

பயிற்சி வகுப்பு

[மன்னார்]

மன்னார் போதனாசிரியர் பிரிவு உப உணவு பயிர்ச்செய்கையாளர்களுக்கான கால போக உப உணவு பயிர்ச்செய்கை தொடர்பான பயிற்சி வகுப்பொன்று இம்மாதம் 21 ஆம் திகதி பேசாலையில் நடைபெறவுள்ளது

இப்பயிற்சி வகுப்பிற்கான ஏற்பாடுகளை பேசாலை உப உணவு பயிர்ச்செய்கையாளர் சங்கத்தலைவர் திரு. அன்ரன் பெல்டானோ மேற்கொண்டுள்ளார்.

இன்று

[கரவெட்டி

புனித மரியாளின் பிறந்த தின விழாவை முன்னிட்டு இன்று மாலை யாழ். பேராலயத்தில் இருந்து யாழ். புனித தமைக்கலநாயகி ஆலயம் வரை செபமாலைப்பாத யாத்திரை நடைபெறவுள்ளது.

யாழ். பேராலயத்தில் இருந்து ஆரம்பிக்கும் இப்பாத யாத்திரை பாங்ஷால் வீதி வழியாக புனித யாகப்பர் ஆலயத்தை அடைந்து, 4-ம் குறுக்குத் தெரு வழியாகப் புனித அடைக்கல மாதா ஆலயத்தை அடையும்

இதனைத் தொடர்ந்து யாழ். ஆயர் அதி. வந். தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலிப் பூசையும், நற்கருணை ஆராதனையும் இடம்பெறும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் யாழ்ப்பாணத்தாரால் யாழ்ப்பாணம் வெல்லாவூரில் வேலுப்பிள்ளை அச்சகத்தில் 1981 செப். மீ 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu — P. O. Box 49 Telegram: 'Eelanadu' T'phone: 889 and 8126.